# தமிழ்


# QUESTION BANK

# &

# PASS BOOK




# XI



VMG

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வகுப்பு - 11 தமிழ் வினாவங்கி 01.11.2024

சிறு குறிப்பேடு

**பாடப் புத்தகத்தின் துணை கொண்டு படிக்கவும் **

என் மதிப்பும், மதிப்பெண்ணும் என் பேனா முனையில் ... ...



... ... ... வழிகாட்டி

படிக்கலாம் வாருங்கள்!

I) செய்யுள்

01. மனப்பாடப்பகுதி
02. திருக்குறளில் பயின்று வரும் அணிகள்
03. திணை, துறை விளக்கம்
04. உவமையைப் பொருளுடன் விளக்குக
05. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
06. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை எடுத்து எழுதுக.

II) செய்யுள், உரைநடை

01 செய்யுள், உரைநடை சார்ந்த ஒரு மதிப்பெண் வினாக்கள்
02. பொருத்துக

III) இலக்கணம்

01. எளிய வழியில் இலக்கணக்குறிப்பு கண்டறியும் வழி முறைகள்
02. புணர்ச்சி விதி
03. பகுபத உறுப்பிலக்கணம்
04. இலக்கண வினாக்கள்
05. அலகிடுதல்
06. மயங்கொலிச் சொற்கள்
07. புதிர்களுக்கான விடை சீரும் தளையும்

IV) மொழித்திறன்

01. எண்ணங்களை எழுத்தாக்குக.
02. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக
03. கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக
04. இலக்கிய நயம் பாராட்டுக
05. தமிழாக்கம் தருக
06. கலைச்சொல்

குறிப்பு - **மற்ற வினாக்களை தமிழ்ப்பாடப் புத்தகத்தில் படிக்க வேண்டும்.

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**I) செய்யுள் மனப்பாடப்பகுதி**

**இயல் 1**

**யுகத்தின் பாடல்**

ஏடுதொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

**- சு. வில்வரத்தினம்**

**பாயிரம் இல்லது பனுவல் அன்றே**

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்புக் காட்டல் பாயிரத்து இயல்பே.

காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.

**- பவணந்தி முனிவர்**

**இயல் 2**

**காவியம்**

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

**- பிரமிள்**

**இயல் 3**

**குறுந்தொகை**

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.

**- வெள்ளிவீதியார்**

**பா வகை : நேரிசை ஆசிரியப்பா**

**திணை : குறிஞ்சித் திணை**

**துறை விளக்கம் :** தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்து விடுவார்களோ? என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் 'தலைவன் வரைவை ஏற்றுக் கொண்டனர்; நீ கவலை ஒழிவாயாக' என்று தோழி கூறியது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**புறநானூறு**

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!

**- கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

**பா வகை : நேரிசை ஆசிரியப்பா**
**திணை : பொதுவியல் திணை**

வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற **பொது**வான செய்திகளையும் கூறுவது **பொது**வியல் திணை ஆகும்.

**துறை : பொருண்மொழிக் காஞ்சித் துறை**

மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக் காஞ்சித் துறை ஆகும்.

**இயல் 7** **புரட்சிக்கவி**

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

**- பாரதிதாசன்**

**பா வகை: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் (அடிதோறும் எட்டு சீர்கள் வந்துள்ளது)**

**இயல் 8** **தொலைந்து போனவர்கள்**

உடைஅணிந்தேன் எனச்சொல்லுகிறாய் - வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

தின்றேன் என்பாய் அணுஅணுவாய் - உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் - பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

**பா வகை : சிந்து** **- அப்துல் ரகுமான்**

## திருக்குறள்

**இயல் 3**

**அடக்கமுடைமை**

01. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
    மலையினும் மாணப் **பெரிது.**

02. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
    சோகாப்பர் சொல்லிழுக்குப் **பட்டு.**

03. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
    நாவினால் சுட்ட **வடு.** **வேற்றுமை அணி**

04. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
    வேளாண்மை செய்தல் **பொருட்டு.**

05. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
    பெருந்தகை யான்கண் **படின்.** **உவமை அணி**

**புகழ்**

06. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
    தோன்றலின் தோன்றாமை **நன்று.**

07. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
    வாழ்வாரே வாழா **தவர்.**

**நிலையாமை**

08. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
    பெருமை உடைத்துஇவ் **வுலகு.**

**துறவு**

09. யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
    அதனின் அதனின் **இலன்.**

10. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
    பற்றுக பற்று **விடற்கு** **சொல் பின்வரும் நிலையணி**

**வலியறிதல்**

11. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
    துணைவலியும் தூக்கிச் **செயல்.** **சொற்பொருள் பின்வருநிலை அணி**

12. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
    வியந்தான் விரைந்து **கெடும்.**

13. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
    இல்லாகித் தோன்றாக் **கெடும்.**

**காலமறிதல்**

14. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
    கருதி இடத்தால் **செயின்.**

**இயல் 5**

**குறிப்பறிதல்**

15. குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் **கொளல்.**

**பகைத்திறம் தெளிதல்**

16. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் **பகை.**

17. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த **இடத்து.** **பிறிது மொழிதல் அணி**

**மருந்து**

18. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி **உணின்.**

19. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் **செயல்.** **சொற்பொருள் பின்வரும் நிலையணி**

**இரவச்சம்**

20. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி **யான்.**

**திருக்குறளில் பயின்று வரும் அணிகள்:**

**01.** தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. **வேற்றுமை அணி**

**02.** மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். **உவமை அணி**

**03.** சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு **உவமை அணி**

**04.** நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். **சொற்பொருள் பின்வரும் நிலையணி**

**05.** பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு **சொல் பின்வரும் நிலையணி**

**06.** இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. **பிறிது மொழிதல் அணி**

**07.** பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் **பிறிது மொழிதல் அணி**

**08.** இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும் **உருவக அணி**

**தேர்வுக்கு வரக்கூடிய முக்கிய வினா - அணி விளக்கம் - 4 மதிப்பெண்**

**இயல் 3**

01. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக. **அல்லது வேற்றுமை அணியை சான்றுடன் விளக்குக.**

**அணி** : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி **வேற்றுமை அணி**

**அணி விளக்கம்** : இரு பொருள்களுக்கிடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, பின அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி ஆகும்.

**சான்று** : தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

**விளக்கம்** : **தீயினால்** சுட்ட புண், உடலில் வடு ஏற்பட்டாலும் உள்ளே **ஆறிவிடும்.** ஆனால் **நாவினால்** புண்படும்படி பேசிய சொல் என்றும் **ஆறாத வடுவாய்** நிற்கும்.

**அணிப் பொருத்தம்** : தீயும் சுடும்; தீய சொல்லும் சுடும் என இரு பொருள்களுக்கு இடையே ஒற்றுமையைக் கூறி, தீயினால் சுட்ட புண் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் கூறிய தீய சொற்கள் மனதில் என்றும் ஆறாது என்று இருவேறு பொருள்களுக்கு இடையே உள்ள வேற்றுமையைக் கூறி வேறுபடுத்துவது **வேற்றுமை அணி** ஆகும்.

02. **சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**
வினைவலியும் தன்வலியும் மாற்றான்வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

**அணி** : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி **சொற்பொருள் பின்வருநிலை அணி**

**அணி விளக்கம்** : ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னரும் பலமுறை வந்து அதே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலை அணி ஆகும்.

**குறள் விளக்கம்** : செயலின் வலிமை, தன் வலிமை, பகைவனின் வலிமை, துணை வலிமை ஆகிய இவற்றைச் சீர்தூக்கிச் செயல்பட வேண்டும்.

**அணிப் பொருத்தம்** : இக்குறட்பாவில் **'வலி'** என்னும் சொல் மீண்டும் மீண்டும் **'வலிமை'** என்ற ஓரே பொருளைக் குறிப்பதால் இது **சொற்பொருள் பின்வருநிலை அணிக்குப் பொருந்தியது.**

**இயல் 5**

03. **உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.**

**அணி** : உருவக அணி

**அணி விளக்கம்** : உவமை வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்று தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும்.

**எ.கா.** இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்

**குறள் விளக்கம்** : பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.

**அணிப் பொருத்தம்:** இக்குறட்பாவில் இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும் என்ற உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாமல் ஒன்றேஎ என்று கூறியிருப்பதால் அது **உருவக அணி** ஆகும்.

| **உவமானம்** | **உவமேயம்** |
|---|---|
| பாதுகாப்பு | படகு |
| கொடாமை | பாறை |

**04. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து. - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

**அணி** : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி **பிறிதுமொழிதல் அணி**
**அணி இலக்கணம்** : புலவர் தாம் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல் உவமையை மட்டும் கூறிப் பின் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.
**குறள் விளக்கம்** : சிறியதாக இருக்கும்போதே முள்மரத்தைக் களைந்து விடுக! முதிர்ந்து விட்டால் வெட்டுபவரின் கையையே காயப்படுத்தும்.
**அணிப் பொருத்தம்** : இக்குறட்பாவில் முள்மரம் சிறிதாக இருக்கும்போதே வெட்டி அழித்துவிட வேண்டும் என்ற உவமையைக் கூறி, பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வெற்றி கொள்ள வேண்டும் என்ற பொருளைப் பெற வைப்பதால் இது **பிறிதுமொழிதல் அணி** ஆகும்

**உவமையைப் பொருளோடு பொருத்துக.**
**01. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்.** இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.
**உவமை** : தன்னிடம் உள்ள எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படும் மரம்
**உவமேயம்** : தன் செல்வம் பிறருக்குப் பயன்படும் வகையில் வாழும் பெருந்தகையாளன்.
**உவமஉருபு** : அற்று
**விளக்கம்** : தன் எல்லா உறுப்புகளும் பயன்படும் மருந்து மரத்தைப் போல பெருந்தகையாளன் பெற்ற செல்வமும் எல்லா வகையிலும் அனைவருக்கும் பயன்படும்.

**02. 'மறுவிலாத அரசென இருந்த மாநகர்' - உவமையைப் பொருளுடன் பொருத்துக.**
**உவமை** : குறைவில்லாத மானுட அறத்தை உடைய பெரும்புகழ் பெற்ற சிறந்த அரசு
**உவமேயம்** : பொலிவுடன் இருந்த மதீனா நகரம்
**உவமஉருபு** : **என**
**விளக்கம்** : பகை, வறுமை, நோய் முதலியன மதீனா நகரத்தைவிட்டு ஓடிவிட்டன. இது உவமை. மேலும், குறைவில்லாத மானுட அறத்தை உடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும் புகழ் பெற்ற சிறந்த அரசைப் போலப் பொலிவுடன் இருந்தது மதீனா நகரம் எனப் பொருள்படும்.

**iii) திணை - துறை விளக்கம்**
**இயல் 2 - ஐங்குறுநூறு**
**திணை - முல்லை**
**துறை** - பருவம் (கார்காலம்) குறித்துப் பிரிந்த தலைவன் அப்பருவத்திற்கு முன்னே வந்தமை குறித்துத் தலைவிக்கு உரைத்தது.

**இயல் 3 - குறுந்தொகை** (அம்ம வாழி ...)
**திணை - குறிஞ்சித் திணை**
**துறை** - தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறான். துலைவி அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்து விடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின் தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர் என்று தோழி கூறியது.

**இயல் 3 - புறநானூறு** (உண்டாலம்ம ...)
**திணை - பொதுவியல் திணை**

வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற **பொது**வான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது **பொது**வியல் திணையாகும்.

**துறை - பொருண்மொழிக்காஞ்சித் துறை**

மக்களுக்கு **நலம் செய்யும் வாழ்வியல் நெறி**களை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.

**இயல் 7 பதிற்றுப்பத்து**
**திணை : பாடாண் திணை**

பாடு ஆண் திணை பாடாண் திணை. பாடப்படும் ஆண்மகனது புகழ், வலிமை, வள்ளல் தன்மை, அருள் முதலானவற்றைப் பற்றிக் கூறுவதாகும். பாடபபடும் ஆண்மகனின் உயர்பண்புகளைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

**சான்று : பதிற்றுப்பத்து - நெடுஞ்சேரலாதனின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.**

**செந்துறைப் பாடாண்பாட்டு துறை விளக்கம் தருக.**
செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண்பாட்டு எனப்படும்.

**வண்ணம் : ஒழுகு வண்ணம்** - வண்ணம் என்பது ஒலிநய **(சந்தம்)** வேறுபாடு ஆகும். ஒழுகு வண்ணம் என்பது ஒழுகிய ஓசையாற் செல்வதாகும்.

**இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**
**இயல் 2**
**01. 'சலச வாவியில் செங்கயல் பாயும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**
**இடம்** : 'சலச வாவியில் செங்கயல் பாயும்' என்ற தொடர் திருமலை முருகன் பள்ளுவில் வடகரை நாட்டின் வளத்தைப் பற்றிப் பள்ளு கூறுவதாக அமைந்த தொடர் ஆகும்.
**பொருள்** : தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.

**விளக்கம்** : வடகரை நாடு நீர் வளம் மிக்கது. அங்குள்ள நீர் நிறைந்த தாமரைத் தடாகத்தில் செந்நிறமான கயல்மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடுகின்றன என்று கவிஞர் வடகரை நாட்டின் வளத்தை சிறப்பித்துக் கூறுகின்றார்.

**இயல் 4**
**02. 'ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்த்தனன் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**
**இடம்** : நற்றிணைப் பாடலில் இத்தொடர் இடம்பெற்றுள்ளது. தலைவன் இல்லறம் ஆற்றும் பாங்கினைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறியது.
**பொருள்** : 'மகள் நிலை உரைத்தல்' என்பது தலைவனோடு உடன் போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது.
**விளக்கம்** : தேன் கலந்த பாலைத் தலைவிக்கு ஊட்டப் பொற்கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு செவிலித்தாய் செல்வார். விளையாட்டுப் பருவத்தில் இருந்த தலைவி பாலைப் பருகாமல் இங்கும் அங்கும் ஓடுவாள். அத்தகைய குணம் கொண்ட தலைவி இன்று எங்ஙனம் சிறப்பாகக் குடும்பம் நடத்துகிறாள். அதுமட்டுமின்றி தன் இல்லத்தின் சூழலுக்கு ஏற்பத் தன் இல்லற வாழ்வை அமைத்துக் கொண்டதை எண்ணி வியக்கிறாள்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் 7**

**03. 'உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**


**இடம் :** பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய புரட்சிக் கவி காவியத்தில் இத்தொடர் இடம்பெற்றுள்ளது.

**பொருள் :** குற்றமில்லாத உயர்ந்த மொழியென தமிழை உங்கள் உயிரினும் மேலாகக் கருதிப் போற்றுங்கள், மக்களே! என்று உதாரன் மக்களைக் கேட்டுக் கொண்டான்.

**விளக்கம் :** உதாரன், அமுதவல்லி காதலை அறிந்த மன்னன் அவர்களுக்கு மரணதண்டனை விதித்தான். கொலைக்களத்தில் இருவருக்கும் பேச வாய்ப்பளித்தான் அமைச்சன். அப்பொழுது உதாரன் வீரவுரை ஆற்றினான்.. "அரசன் தன் மகளுக்குக் கவி பாடக் கற்றுக் கொடுக்கச் சொன்னதற்கும், அமுதவல்லி என்மேல் காதல் கொண்டதற்கும் தமிழ்தானே காரணம். அமுதம் போன்ற தமிழ் என் உயிர் போவதற்குக் காரணம் தமிழ் என்று சமுதாயம் நினைத்திடுமோ? அப்படி ஒரு பழி தமிழுக்குண்டானால் தமிழினம் தாங்கிக் கொள்ளுமா? உங்களிடம் ஒன்று வேண்டுகிறேன். உயர்தமிழை உங்கள் உயிரினும் மேலாகக் கருதிப் போற்றுங்கள். நான் விடைபெறுகிறேன்" என்று உதாரன் கூறினான்.

**படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை எடுத்து எழுதுக.**

**இயல் 3**




**அ)** வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

**ஆ)** அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல்
இல்லாகித் தோன்றாக் கெடும்.

**இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.**

**இயல் 5**



**அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.**

**ஆ)** இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

**இ)** உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இலக்கணம்
## எளிய வழியில் இலக்கணக் குறிப்பு கண்டறியும் முறைகள்:

### 01. பண்புத்தொகை :

- குணம், நிறம், சுவை, வடிவம், அளவு - இப்பண்புகளுள் ஒன்றைப் பெற்று வரும்.
- முதலில் பண்புச்சொல்லும் அடுத்துப் பெயர்ச்சொல்லும் இணைந்து வரும்.
- பண்புத்தொகைச் சொற்களைப் பிரிக்கும் போது பெரும்பாலும் முதற்சொல்லின் இறுதியில் '**மை**' விகுதி வரும்.

**01.** செங்கயல் **02.** வெண்சங்கு **03.** பெரும்புகழ் **04.** தீம்பால்
**05.** வெண்சுவை **06.** பெரும்புகழ் **07.** தெண்டிரை **08.** அருஞ்சமம்
**09.** நல்லாடை **10.** பேரன்பு **11.** நெடுங்குன்று **12.** பேரழகு
**13.** இளமுகம் **14.** நல்லூண் **15.** சிறுபுல் **16.** முந்நீர்
**17.** நன்மண்

### 02. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

01. தமிழ்க்கவிஞர்

### 03. வினைத்தொகை

- இரு சொற்களாக இணைந்து வரும்.
- முதற்சொல் வினைச்சொல்லாகவும் இரண்டாம் சொல் பெயர்ச்சொல்லாகவும் வரும்.
- இருசொற்களுக்கு இடையில் மூன்று காலங்களும் மறைந்திருக்கும்.

**01.** விரிகதிர் **02.** ஒழுகுநீர் **03.** எரிவாள் **04.** சுடுகாடு
**05.** கொல்புலி **06.** கரைகடல் **07.** அலைகடல் 08. புகழ் பண்பு
**09.** செய்தொழில் **10.** அலைகடல் **11.** வீழருவி

### 04. வினைமுற்று

- ஒரு வினைச்சொல்லின் கருத்து முழுமை பெற்றால் அது வினைமுற்று எனப்படும்.
- காலம், திணை, எண், இடம், பால் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டும்.

**01.** ஆடுகம் (ஆடுவோம் என்பது இதன் பொருள்)
**02.** மருண்டனென் (வியப்படைந்தேன் என்பது இதன் பொருள்)
**03.** கற்றேன் **04.** தொடங்கினர் **05.** பயின்றார் **06.** பிறந்தார்

### 05. முன்னிலை ஒருமை வினைமுற்று

**01.** உரைத்தாய்

### 06. ஏவல் பன்மை வினைமுற்று

**01.** ஏகுமின் **02.** ஏகுதி

### 07. வியங்கோள் வினைமுற்று

**க, இய, இயர்** என ஈற்றில் ஏதாவது ஒன்று வரும்.

**01.** ஓது**க** 02. பேசிடு**க** 03. ஆழ்**க** 04. வா**ழிய** (வாழ்+இய)

## 08. வினையெச்சம்

- வினையைக் கொண்டு முடியும் எச்சவினைச்சொல் வினையெச்சமாகும்.
- சொல் பெரும்பாலும் அ, இ, உ என்னும் ஓசைகளுள் ஒன்றினால் முடியும்.

01. தாவி 02. உருட்டி

## 09. பெயரெச்சம்:

- பெயரைக் கொண்டு முடியும் எச்சவினைச்சொல் பெயரெச்சம் ஆகும்.
- சொல் **அ** அல்லது **உம்** என்னும் ஒலிகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

01. கொண்ட 02. மலிந்த 03. பூத்த 04. **மாண்ட** தவளை
05. முளைத்த 06. பின்னிய 07. பொலிந்த 08. அருளிய
09. **அழிந்த** வரலாறு 10. **புதிய** வெளிச்சம்

## 10. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் -

- முதற்சொல் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் எச்ச வினைச்சொல்லாக இருக்கும்.
- முதற்சொல் பெரும்பாலும் துணையெழுத்துடன் முடியும்.

01. முயலா 02. பிழையா 03. ஓடியா 04. ஆசிலா 05. ஓவா
06. **அழியாச்** சிறப்பிடம்

## 11. தொழிற்பெயர் -

- தொழிலைக் குறிக்கும்.
- தல், அல், அம், ஐ, கை ... போன்ற விகுதிகளுள் ஒன்றைப் பெற்று வரும்.

01. காட்**டல்** 02. கோ**டல்** 03. உண்**டல்** 04. துஞ்**சல்**
05. அறி**தல்** 06. போற்**றல்** 07. நினைத்**தல்** 08. கேட்**டல்**
09. பயி**றல்** 10. ஒழி**தல்** 11. துய்த்**தல்** 12. தங்கு**தல்**

## 12. வினையாலணையும் பெயர் -

வினைச்சொல் பெயரோடு சேர்ந்து பெயர்ப்பொருளைத் தந்தால் அது வினையாலணையும் பெயர் ஆகும்.

01. கேட்போர் 02. பிரிந்தோர் 03. திளைப்பர் 04. தொழுதவர்
05. உழுதவர் 06. விதைத்தவர் 07. வியர்த்தவர் 08. புதுக்கியவர்

## 13. இரண்டாம் வேற்றுமைத்தொகை

01. கொன்றைசூடு 02. உடை அணிந்தேன்

## 14. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை -

- இரு சொற்கள் இணைந்து வரும்.
- அவ்விரு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபும் அதன் பொருளை (பயனை) விளக்கும் வேறு சொல்லும் மறைந்து வரும்.

01. பொன்னகர் 02. பூக்குலை

**15. மூன்றாம் வேற்றுமைத்தொகை :** **01.** சுடச்சுடரும்

**16. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**

**01.** பொற்கலம் **02.** பொற்சிலம்பு

**17. ஆறாம் வேற்றுமைத்தொகை**

**01.** அகிற்புகை

**18. உரிச்சொற்றொடர்**

- சால, உறு, தவ, நனி, கூர், கழி, மா, தட..என்பவை உரிச்சொற்கள்.
- இவற்றுள் ஏதேனும் ஒன்று பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல்லின் முன் வரும்.

**01.** **மா**நகர் **02.** **நனி**இருக்கும் **03.** **மா**நகர் **04.** **உறு**பகை
**05.** **கடி**நகர் **06.** **சாலத்**தகும்

**19. அடுக்குத்தொடர்**

- ஒரு சொல் இரண்டு முதல் நான்கு முறைகள் அடுக்கி வரும்.
- பிரித்தால் பொருள் தரும்.
- விரைவு, மகிழ்ச்சி கோபம், துன்பம், அச்சம் - இவற்றுள் ஒன்றினை உணர்த்தும்.

**01.** நன்று நன்று **02.** சுடச்சுட **03.** சொல்லச்சொல்ல **04.** உழுதுழுது
**05.** நில் நில் **06.** உழுதுழுது **07.** பார்த்துப் பார்த்து

**20. இரட்டைக்கிளவி :**

- இரட்டைச்சொல்லாகவே வரும்.
- பிரித்தால் பொருள் தராதுஇ

**01.** நெறுநெறு

**21. உம்மைத்தொகை**

- இருசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் **உம்** மறைந்து வரும்.

**01.** புல்புழு (புல்**லும்** புழு**வும்**) **02.** இராப்பகல் (இர**வும்** பக**லும்**)

**22. எண்ணும்மை -**

- ஒன்றுக்கொன்று தொடர்புடைய சொற்கள் சேர்ந்து வரும்.
- உம் வெளிப்படையாக வரும்.

**01.** மஞ்ஞையும் கொண்டலும் **02.** அறி**வும்** ஒழுக்க**மும்**
**03.** தான**மும்** ஒழுக்க**மும்** **04.** தவ**மும்** ஈகை**யும்**
**05.** புழுக்க**ளும்** பூச்சி**யும்**

**23. முற்றும்மை :**

- எண்ணிக்கை **முற்றுப் பெறுவதைக்** கூறுவது முற்றும்மை ஆகும்

**01.** ஐந்தும்

**24. உருவகம்**

- ஆகிய, என்னும் - போன்ற சொற்கள் மறைந்து வரும்

**01.** காலத்தச்சன் **02.** புலமைக்கதிரவன்

www.Padasalai.Net

**25. உவமைத்தொகை :**

- இருசொற்கள் இணைந்து வரும்.
- முதற்சொல் உவமைச்சொல்லாய் வரும்.
- இரு சொற்களுக்கும் இடையில் **"போல"** என்ற உவம உருபு மறைந்து வரும்.

**01.** சுடச்சுடரும் பொன் **02.** மலையலை **03.** குகைமுகம்

**26. சொல்லிசை அளபெடை:**

- சொல் **"இ"** என்னும் உயிரெழுத்தில் முடியும்.
- இந்த உயிரெழுத்தை நீக்கிவிட்டு, மீதி எழுத்துகள் சேர்ந்து ஓரசைச் சீராக இருக்கும்

01. வளை**இ** 02. நசை**இ** 03. தழீஇய

**27. இசைநிறை அளபெடை செய்யுளிசை அளபெடை**

- செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய நெட்டெழுத்துகள் அளபெடுத்து வரும். இதுவே செய்யுளிசை அளபெடை எனப்படும்.
- நெட்டெழுத்துக்கு இனமான குற்றெழுத்து வந்து அளபெடுக்கும்.

அதூ**உம்**

**28. இடைக்குறை :**

- சொல்லின் இடையில் எழுத்து குறைந்து வரும். ஆனால் பொருள் மாறாது.

01. எலாம் **(எல்லாம்** என்பதன் இடைக்குறை**)**

**29. அசைநிலை:**

- வேறு பொருள் உணர்த்தாது பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் சேர்த்துச் சொல்லப்படுவது, பொருள் இல்லாததாக வரும்.

**01.** ஆல் **02.** அம்ம

**30. விளிச்சொல்**

- ஒருவரை அழைப்பது விளிச்சொல் ஆகும்.

01. மாதே! (பெண்ணே)

**31. அண்மை விளிச்சொல்**

- அருகில் உள்ளவரை அழைப்பது அண்மை விளிச்சொல் ஆகும்.

**01.** கண்ணி (கண்களை உடையவளே!)

**32. இலக்கணப்போலி**

- சொல் முன்பின்னாக மாறி வருவது இலக்கணப்போலி எனப்படும்.

**01.** வாய்க்கால் (கால்வாய் என்பது முன்பின் தொக்கியது)

**33. ஈற்றுப்போலி**

- ஈற்றெழுத்து மாறினாலும் பொருள் மாறாது.

**01.** பந்தர் **(பந்தல்)** 02. இட**ன் (**இட**ம்)** 03. அற**ன் (**அறம்)

**04.** திற**ன் (**திற**ம்)**

www.Padasalai.Net

## பகுபத உறுப்பிலக்கணம்

**01. வைத்தார் - வை + த் + த் + ஆர்**

வை - பகுதி
த் - சந்தி
த் - (இறந்தகால) இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**02. காண்பிப்பார் - காண்பி + ப் + ப் + ஆர்**

காண்பி - பகுதி
ப் - சந்தி
ப் - (எதிர்கால) இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**03. மறுத்து - மறு + த் + த் + உ**

மறு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**04. உண்டான் - உண் + ட் + ஆன்**

உண் - பகுதி
ட் - இடைநிலை
ஆன் - வினைமுற்று விகுதி

**05. செய்வாள் - செய் + வ் + ஆன்**

செய் - பகுதி
வ் - இடைநிலை
ஆன் - வினைமுற்று விகுதி

**06. அழைத்தான் - அழை + த் + த் + ஆன்**

அழை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - வினைமுற்று விகுதி

**07. பறித்தார் - பறி + த் + த் + ஆர்**

பறி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஆர் - வினைமுற்று விகுதி

**08. துய்த்தல் - துய் + த் + தல்**

துய் - பகுதி
த் - சந்தி
தல் - தொழிற்பெயர் விகுதி

www.Padasalai.Net

**09. முளைத்த - முளை + த் + த் + அ**

முளை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**10. பதிப்பித்தார் - பதிப்பி + த் + த் + ஆர்**

பதிப்பி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஆர் - வினைமுற்று விகுதி

**11. வாழ்வான் - வாழ் + வ் + ஆன்**

வாழ் - பகுதி
வ் - சந்தி
ஆன் - வினைமுற்று விகுதி

**12. விளங்கினார் - விளங்கு + இன் + ஆர்**

விளங்கு - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை
ஆர் - வினைமுற்று விகுதி

**13. தொடங்கினர் - தொடங்கு + இன் + அர்**

தொடங்கு - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை
அர் - வினைமுற்று விகுதி

**14. நெருங்கின - நெருங்கு + இன் + அ**

நெருங்கு - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை
ஆ - வினைமுற்று விகுதி

**15. ஈட்டினார் - ஈட்டு + இன் + ஆர்**

ஈட்டு - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை
ஆர் - வினைமுற்று விகுதி

**16. இரங்கி - இரங்கு + இ**

இரங்கு - பகுதி
இ - விகுதி

**17. கவர்ந்து - கவர் + த் (ந்) + த் + உ**

கவர் - பகுதி
த் - சந்தி (ந் எனத் திரிந்தது விகாரம்)
த் - (இறந்தகால) இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



18. **அலர்ந்து - அலர் + த் (ந்) + த் + உ**

அலர் - பகுதி
த் - சந்தி (ந் எனத் திரிந்தது விகாரம்)
த் - (இறந்தகால) இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

19. **பிரிந்தோர் - பிரி + த் (ந்) + த் + ஓர்**

பிரி - பகுதி
த் - சந்தி (ந் எனத் திரிந்தது விகாரம்)
த் - (இறந்தகால) இடைநிலை
ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

20. **பிரிந்த - பிரி + த் (ந்) + த் +அ**

பிரி - பகுதி
த் - சந்தி (ந் எனத் திரிந்தது விகாரம்)
த் - (இறந்தகால) இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

21. **மெலிந்து - மெலி + த் (ந்) + த் + உ**

மெலி - பகுதி
த் - சந்தி (ந் எனத் திரிந்தது விகாரம்)
த் - (இறந்தகால) இடைநிலை
அ - வினையெச்ச விகுதி

22. **அணிந்தேன் - அணி + த் (ந்) + த் + ஏன்**

அணி - பகுதி
த் - சந்தி (ந் எனத் திரிந்தது விகாரம்)
த் - (இறந்தகால) இடைநிலை
ஏன் - வினைமுற்று விகுதி

23. **வருகின்ற - வா (வரு) + கின்று + அ**

வா - பகுதி (வரு எனத் திரிந்தது விகாரம்)
கின்று - நிகழ்கால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

24. **வருகின்றாள் - வா (வரு) + கின்று + ஆள்**

வா - பகுதி - வரு எனத் திரிந்தது விகாரம்
கின்று - (நிகழ்கால) இடைநிலை
ஆள் - வினைமுற்று விகுதி

25. **நிற்கின்றாய் - நில் (ற்) + கின்று + ஆய்**

நில் - பகுதி (ல் ற் எனத் திரிந்தது விகாரம்)
கின்று - நிகழ்கால இடைநிலை
ஆய் - வினைமுற்று விகுதி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**26. நின்றார் - நில் (ன்) + ற் + ஆர்**

நில் - பகுதி (ல் ன் எனத் திரிந்தது விகாரம்)
ற் - (இறந்தகால) இடைநிலை
ஆர் - வினைமுற்று விகுதி

**27. வென்றேன் - வெல் (ன்) + ற் + ஏன்**

வெல் - பகுதி (ல் ன் எனத் திரிந்தது விகாரம்)
ற் - இறந்தகால இடைநிலை
ஏன் - வினைமுற்று விகுதி

**28. சென்ற - செல் (ன்) + அ**

செல் - பகுதி (ல் ன் எனத் திரிந்தது விகாரம்)
ற் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**29. பயின்றார் - பயில் (ன்) + ற் + ஆர்**

பயில் - பகுதி பகுதி (ல் ன் எனத் திரிந்தது விகாரம்)
ற் - இறந்தகால இடைநிலை
ஆர் - வினைமுற்று விகுதி

**30. காண்பிப்பார் - காண்பி + ப் + ப் +ஆர்**

காண்பி - பகுதி
ப் - சந்தி
ப் - இடைநிலை
ஆர் - வினைமுற்று விகுதி

**31. ஈன்ற - ஈன் + ற் +அ**

ஈன் - பகுதி
ற் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**32. பெற்ற - பெறு (பெற்று) + அ**

பெறு - பகுதி (பெற்று என ஒற்று இரட்டித்தது)
அ - பெயரெச்ச விகுதி

**33. பெற்றேன் - பெறு (பெற்று) + ஏன்**

பெறு - பகுதி (பெற்று என ஒற்று இரட்டித்தது)
ஏன் - வினைமுற்று விகுதி

**34. ஆழ்க - ஆழ் + க**

ஆழ் - பகுதி
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

www.Padasalai.Net

**35. வாழ்வான் - வாழ் + வ் + ஆன்**

வாழ் - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஆன் - வினைமுற்று விகுதி

**36. துஞ்சல் - துஞ்சு + அல்**

துஞ்சு - பகுதி
அல் - தொழிற்பெயர் விகுதி

**37. முனிவிலர் - முனி + வ் + இல் + அர்**

முனி - பகுதி
வ் - சந்தி
இல் - இடைநிலை
அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**38. வருகின்றாள் - வா (வரு) + கின்று + ஆள்**

வா - பகுதி - வரு என்றானது விகாரம்
கின்று - நிகழ்கால இடைநிலை
ஆள் - வினைமுற்று விகுதி

**39. வேண்டுகின்றேன் - வேண்டு + கின்று + ஏன்**

வேண்டு - பகுதி
கின்று - நிகழ்கால இடைநிலை
ஏன் - வினைமுற்று விகுதி

**40. மருண்டனென் - மருள் (ண்) + ட் + அன் + என்**

மருள் - பகுதி (ள் ண் ஆனது விகாரம்)
ட் - இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
என் - வினைமுற்று விகுதி

**41. விடுத்தனை - விடு + த் + த் +அன் + ஐ**

விடு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
ஐ - வினைமுற்று விகுதி

**42. ஏகுமின் - ஏகு + மின்**

ஏகு - பகுதி
மின் - வினைமுற்று விகுதி

**பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

| வ.எண் | சொற்கள் | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | செய்க | செய் | | | | | க |
| 2. | தோன்று | தோன்று | | | | | இ |
| 3. | கொடுத்த | கொடு | த் | | த் | | அ |
| 4. | பார்த்தான் | பார் | த் | | த் | | ஆன் |
| 5. | அமைந்து | அமை | த் | ந் | த் | | உ |
| 6. | நடந்தனன் | நட | த் | ந் | த் | அன் | அன் |
| 7. | வருகிறார் | வா | | வரு | கிறு | | ஆர |

**புணர்ச்சி விதி**

**01) உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

**01. புகழெனின்** - **புகழ் + எனின்**
**விதி** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
புகழெனின் (ழ் + எ - ழெ)

**02. புலனறிவு** - **புலன் + அறிவு**
**விதி** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
- புலனறிவு (ன் + அ - ன)

**03. பயமில்லை** - **பயம் + இல்லை**
**விதி** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
- பயமில்லை (ம் + இ - மி)

**04. மேலவை- மேல் + அவை**
**விதி** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
- மேலவை (ல் அ ல)

**05. நீரோடை - நீர் + ஓடை**
**விதி** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
- நீரோடை (ர் + ஓ - ரோ)

**02) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.**

**06. பொதுச்சிறப்பு** - **பொது + சிறப்பு**
**விதி** - இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
பொது + ச் + சிறப்பு - பொது**ச்**சிறப்பு

**07. குரங்குக்குட்டி** - **குரங்கு + குட்டி**
**விதி** - இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
குரங்கு+ க் +குட்டி - குரங்கு**க்**குட்டி

www.Padasalai.Net

08. **திரைப்படம்** - **திரை + படம்**
**விதி** - இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
திரை + ப் + படம் - திரை**ப்**படம்

09. **திருப்புகழ்** - **திரு + புகழ்**
**விதி** - இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
திரு + ப் + புகழ் - திரு**ப்**புகழ்

10. **மணிக்குலம்** - **மணி + குலம்**
**விதி** - இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
- மணி + க் + குலம் - மணி**க்**குலம்

**3) விதி - 1 - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்**
**விதி - 2 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

11. **அணிந்துரை** - **அணிந்து உரை**
**விதி - 1** - உயிர்வரின் உக்குறள் மெய்வ விட்டோடும் - அணிந்த்+ உரை
**விதி - 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
அணிந்துரை (த் + உ- து)

12. **உயர்ந்தோங்கும்** - **உயர்ந்து + ஓங்கும்**
**விதி 1** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - உயர்ந்த் + ஓங்கும்
**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
உயர்ந்தோங்கும் (த் + ஓ - தோ)

13. **தண்டுடை** - **தண்டு + உடை**
**விதி 1** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - தண்ட் + உடை
**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
தண்டுடை (ட்+ உ- டு)

14. **இயைவதாயினும்** - **இயைவது + ஆயினும்**
**விதி 1** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - இயைவத் + ஆயினும்
**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
இயைவதாயினும் (த் + ஆ - தா)

15. **இனிதென** - **இனிது + என**
**விதி 1** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - இனித் + என
**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
இனிதென (த் + எ - தெ)

www.Padasalai.Net

16. **இழுக்கின்றி - இழுக்கு + இன்றி**

**விதி 1** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - இழுக்க் + இன்றி

**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

இழுக்கின்றி (க் + இ - கி)

17. **உலகனைத்தும் - உலகு + அனைத்தும்**

**விதி 1** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - உலக்+அனைத்தும்

**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

உலகனைத்தும் (க் + உ - கு)

18. **அமுதென்று - அமுது + என்று**

**விதி 1** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - அமுத் + என்று

**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

- அமுதென்று (த் + எ - தெ)

19. **உழுதுழுது - உழுது + உழுது**

**விதி 1** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - உழுத் + உழுது

**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

- உழுதுழுது (த் + உ - து)

**4) விதி 1 - இ ஈ ஐ வழி யவ்வும்**

**விதி 2 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

20. **வழியில்லை - வழி + இல்லை**

**விதி 1** - இ ஈ ஐ வழி யவ்வும் வழி + ய் + இல்லை

**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே -

வழியில்லை (ய் + இ - யி)

21. **முறையறிந்து - முறை + அறிந்து**

**விதி 1** - இ ஈ ஐ வழி யவ்வும் முறை + ய் + அறிந்து

**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

முறையறிந்து (ய் + அ - ய)

22. **மனையென - மனை + என**

**விதி 1** - இ ஈ ஐ வழி யவ்வும் - மனை + ய் + என

**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

மனையென (ய் + எ - யெ)

23. **புவியாட்சி - புவி + ஆட்சி**

**விதி 1** - இ ஈ ஐ வழி யவ்வும் - புவி + ய் + ஆட்சி

**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

- புவியாட்சி (ய் + ஆ - யா)

**5) ஈறு போதல்**

**24. சிறுகோல் - சிறுமை + கோல்**
**விதி** - ஈறு போதல் - சிறு + கோல் (மை நீக்குக)

**25. கருவிழி - கருமை விழி**
**விதி** - ஈறு போதல் - கரு + விழி (மை நீக்குக)

**(குறிப்பு - இன எழுத்து மிகல் - ங்க / ஞ்ச / ந்த / ம்ப)**

**26. அரும்பொருள் - அருமை பொருள்**
**விதி 1** - ஈறு போதல் - அரு + பொருள் (மை நீக்குக)
**விதி 2** - இனமிகல் - அரு**ம்பொ**ருள்

**27. பெருங்காடு - பெருமை + காடு**
**விதி 1** - ஈறு போதல் - பெரு + காடு (மை நீக்குக)
**விதி 2** - இனமிகல் - பெரு**ங்கா**டு

**28. பெருங்கல் - பெருமை + கல்**
**விதி 1** - ஈறு போதல் - பெரு + கல் (மை நீக்குக)
**விதி 2** - இன மிகல் - பெரு**ங்க**ல்

**29. கொழுஞ்சோறு - கொழுமை + சோறு**
**விதி 1** - ஈறு போதல் - கொழு + சோறு (மை நீக்குக)
**விதி 2** - இன மிகல் - கொழு**ஞ்சோ**று

**30. செங்கயல் - செம்மை + கயல்**
**விதி 1** - ஈறு போதல் - செம் + கயல் (மை நீக்குக)
**விதி 2** - முன்னின்ற மெய் திரிதல் - செ**ங்க**யல் (ங் <--> க)

**31. புத்துணர்ச்சி - புதுமை உணர்வு**
**விதி 1** - ஈறு போதல் - புது + உணர்வு
**விதி 2** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - புத் + உணர்வு
**விதி 3** - தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் - புத்த் + உணர்வு
**விதி 4** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
புத்துணர்வு (த் + உ - து)

**32. பேரழகு - பெருமை + அழகு**
**விதி 1** - ஈறு போதல் - பெரு + அழகு
**விதி 2** - ஆதி நீடல் - பேரு + அழகு
**விதி 3** - இனையவும் பண்பிற்கு இயல்பே
- பேர் அழகு (ரு <--> ர் - உகரம் கெட்டது)
**விதி 4** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
பேரழகு (ர் + அ - ர)

www.Padasalai.Net

33. **பாசிலை - பசுமை + இலை**

**விதி 1** - ஈறு போதல் - பசு + இலை

**விதி 2** - ஆதி நீடல் - பாசு + இலை

**விதி 3** - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் - பாச் + இலை

**விதி 4** - உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - பாசிலை (ச் + இ - சி)

34. **சிறியன் - சிறுமை + அன்**

**விதி 1** - ஈறு போதல் - சிறு + மை

**விதி 2** - இ ஈ ஐ வழி யவ்வும் - சிறி + ய் + அன்

**விதி 3** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - சிறியன் (ய் + அ - ய)

35. **சிற்றூர் - சிறுமை + ஊர்**

**விதி 1** - ஈறு போதல் - சிறு + ஊர்

**விதி 2** - தன்னொற்று இரட்டல் - சிற்று + ஊர்

**விதி 3** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - சிற்ற் + ஊர்

**விதி 4** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே சிற்றூர் (ற் + ஊ - றூ)

**6) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

36. **வில்லொடிந்தது- வில் + ஒடிந்தது**

**விதி 1** - தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் - வில்ல் + ஒடிந்தது

**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - வில்லொடிந்தது (ல்+ஒ-லொ)

37. **மண்ணுடை - மண் + உடை**

**விதி 1** - தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் - மண்ண் + உடை

**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - மண்ணுடை (ண் + உ - ணு)

38. **ஞாயிற்றொளி - ஞாயிறு + ஒளி**

**விதி 1** - உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - ஞாயிற் + செலவு

**விதி 2** - நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களுள் டற ஒற்று இரட்டும் ஞாயிற்ற் + ஒளி

**விதி 3** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - ஞாயிற்றொளி (ற் + ஒ - றொ)

39. **பொற்சிலம்பு** - **பொன் + சிலம்பு**
**விதி** - ணன வல்லினம் வர டற வும்
- பொற்சிலம்பு (ன் <--> ற்)

40. **கற்குவியல்** - **கல் + குவியல்**
**விதி** - லள வேற்றுமையில் வலிவரின் றட வும்
- கற்குவியல் (ல் <--> ற்)

41. **திருவடி** - **திரு + அடி**
**விதி 1** - ஏனை உயிர்வழி வவ்வும் - திரு + வ் + அடி
**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - திருவடி (வ்+ அ-வ)

42. **புறந்தருதல்** - **புறம் + தருதல்**
**விதி 1** - மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும். புறந்தருதல் (ந் <--> ம்)

43. **காலத்தச்சன்** - **காலம் + தச்சன்**
**விதி 1** - மவ்வீறு ஒற்றழிந்து உயிரீற ஒப்பவும் - கால + தச்சன்
**விதி 2** - வல்லினம் மிக்குப் புணரும் - காலத்தச்சன்

## இலக்கண வினாக்கள்

**இயல் 1**

**விடை தேர்க :**

01. **தவறான இணையைத் தேர்வு செய்க.**
**அ)** மொழி + ஆளுமை - உயிர் + உயிர் **இ) கடல் + அலை - உயிர் + மெய்**
**ஆ)** தமிழ் + உணர்வு - மெய் + உயிர் **ஈ)** மண் + வளம் - மெய் + மெய்

02. **கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும் காலத்தால் சாகாததொல் கனிமங்கள் - அடிமோனையைத் தெரிவு செய்க.**
**அ)** கபாடபுரங்களை - காவுகொண்ட **ஆ)** காலத்தால் - கனிமங்கள்
**இ) கபாடபுரங்களை - காலத்தால்** **ஈ)** காலத்தால் - சாகாதா

03. பாயிரம் இல்லது _________ அன்றே.
**அ)** காவியம் **ஆ) பனுவல்** **இ)** பாடல் **ஈ)** கவிதை

04. **ஒரு திரவநிலையில் நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. - இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.**
**அ)** மொழி என்பது திடதிரவநிலையில் இருக்கும்.
**ஆ)** பேச்சுமொழி, எழுத்துமொழியை திடதிரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.
**இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.**
**ஈ)** பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

**05. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.**

**அ) அன்னம், கிண்ணம்** (அ, க்+இ-கி) **ஆ)** டமாரம், இங்ஙனம்

**இ)** ரூபாய், லட்சாதிபதி **ஈ)** றெக்கை, அங்ஙனம்

**06. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

**01. காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.**
காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.

**02. முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.**
முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.

**03. காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தணும்.**
காலத்திற்கேற்ற மாதிரி புதிதுபுதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.

**04. ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கணும்**
ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.

**05. தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிருக்கும்.**
தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள்; நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாக இருக்கும்.

**07. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

**01. ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்**
அ) மயில் ஓர் அழகான பறவை.
ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

**02. பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி**
அ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.
ஆ) கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

**03. நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை**
அ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.
ஆ) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

**04. பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை**
அ) பிறர் செய்த உதவியை மறக்கக் கூடாது.
ஆ) நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.

**05. நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா,**
அ) நேற்று வந்த பையன் யார் தெரியுமா?
ஆ) பக்கத்தில் ஏன் நிற்கவில்லை தெரியுமா?

**06. கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்**
அ) கோசல நாடு ஒரு சிறந்த நாடு.
ஆ) மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**08. வேர்ச்சொற்களை தொடர்களாக மாற்றுக.**

**01. வேர்ச்சொல் - வா**

**வினைமுற்று** - அருணா வீட்டிற்கு **வந்தாள்.**

**பெயரெச்சம்** - வீட்டிற்கு **வந்த அருணா** தோழியைச் சந்தித்தாள்.

**வினையெச்சம்** - அருணா மேடையில் **வந்து நின்றாள்.**

**வினையாலணையும் பெயர்** - அருணாவைப் பார்க்க **வந்தவர்** என் தந்தையின் நண்பர்.

**02. வேர்ச்சொல் - பேசு**

**வினைமுற்று** - கண்ணன் நன்றாகப் **பேசினான்.**

**பெயரெச்சம்** - தெளிவாகப் **பேசிய கண்ணனை** அனைவரும் பாராட்டினர்.

**வினையெச்சம்** - கண்ணன் வரவேற்புரையைப் **பேசி முடித்தான்.**

**வினையாலணையும் பெயர்** - தொலைக்காட்சியில் **பேசியவர்** யார்?

**03. வேர்ச்சொல் - தா**

**வினைமுற்று** - என் தாத்தா எனக்குப் பிறந்தநாள் பரிசு **தந்தார்.**

**பெயரெச்சம்** - என் தாத்தா **தந்த பரிசு** எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

**வினையெச்சம்** - பள்ளி முதல்வர் சான்றிதழ்களைத் **தந்து முடித்தார்.**

**வினையாலணையும் பெயர்** - உனக்குப் பரிசு **தந்தவர்** யார்?

**04. வேர்ச்சொல் - ஓடு**

**வினைமுற்று** - முகுந்தன் ஓட்டப் பந்தயத்தில் **ஓடுகிறான்.**

**பெயரெச்சம்** - வேகமாக **ஓடிய முகுந்தன்** பரிசு பெற்றான்.

**வினையெச்சம்** - குழந்தை வேகமாக **ஓடி விழுந்தது.**

**வினையாலணையும் பெயர்** - வேகமாக **ஓடியவர்** முதல் பரிசு பெற்றார்.

**05. வேர்ச்சொல் - பாடு**

**வினைமுற்று** - காவ்யா நன்றாகப் **பாடினாள்**

**பெயரெச்சம்** - பாட்டுப் **பாடிய காவ்யா** நடனமும் ஆடினாள்.

**வினையெச்சம்** - காவ்யா பாட்டுப் **பாடி முடித்தாள்.**

**வினையாலணையும் பெயர்** - மேடையில் **பாடியவள்** அனைவராலும் பாராட்டப்பட்டாள்.

## இயல் 2

**01. பொருத்துக**

1) அடி அகரம் ஐ ஆதல் - செங்கதிர் ( )
2) முன் நின்ற மெய் திரிதல் - பெருங்கொடை ( )
3) ஆதிநீடல் - பைங்கூழ் ( )
4) இனமிகல் - காரிருள் ( )

**விடை**

1) அடி அகரம் ஐ ஆதல் - பைங்கூழ்
2) முன் நின்ற மெய் திரிதல் - செங்கதிர்
3) ஆதிநீடல் - காரிருள்
4) இனமிகல் - பெருங்கொடை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**02. கூற்றுகளைப் படித்துக் கீழ்க்காண்பனவற்றுள் சரியானதைத் தேர்க.**

அ) நிலைமொழியில் குற்றியலுகரமாகவும் வருமொழியின் முதல் உயிரெழுத்தாகவும் அமையும்போது "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்" என்னும் விதியைப் பெறும்.

ஆ) நிலைமொழியின் ஈற்றில் இஈஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.

இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் 'ஈறு போதல்' என்னும் விரியே முதன்மையானதாக விளங்கும்.

ஈ) தன்னொற்றிரட்டல் என்னும் விதி பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும்.

**1) அ ஆ இ சரி ஈ தவறு** 2) அ இ ஈ சரி ஆ தவறு

**03. ஐங்குநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக**

**திணை** : முல்லைத் திணை

**முதற்பொருள்**- நிலமும் பொழுதும் முதற்பொருளாகும்

**நிலம்** - காடும் காடு சார்ந்த இடமும்.

**பொழுது** - பெரும்பொழுது - கார் காலம் சிறுபொழுது - மாலை

**உரிப்பொருள்** - இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

**கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| 1. | **தெய்வம்** | திருமால் |
| 2. | **மக்கள்** | ஆயர், ஆய்ச்சியர் |
| 3. | **தொழில்** | ஏறு தழுவல், நிரை மேய்த்தல் |
| 4. | **மரம்** | முல்லை, கொன்றை, தோன்றி, காயா |
| 5. | **பண்** | முல்லைப் பண் |
| 6. | **பூ** | முல்லை |
| 7. | **பறவை** | காட்டுக்கோழி |
| 8. | **விலங்கு** | மான், முயல் |

**04. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

**அ) உலை, உளை, உழை**

மன **உளை**ச்சல் தீரவும், வீட்டில் **உலை** கொதிக்கவும் **உழைக்**க வேண்டும்.

**ஆ) வலி, வளி, வழி**

**வளி (காற்று)** வேகமாக வீசியதால் அகிலன் **வழி** தெரியாமல் அலைந்து சென்றதால் கால் **வலி** எடுத்தது.

**இ) கலை, களை, கழை**

**கழை** (மூங்கில்) மேல் நடக்கும் **கலை**யில் சிறந்த சிறுவனின் முகம் **களை**யாக இருந்தது.

**ஈ) கனை, கணை**

போர்க்களத்தில் **கணை** (அம்பு) பட்ட குதிரை **கனை**த்தது.

**உ) குரை, குறை**

நாய்கள் **குரை**க்கும் ஓசை **குறை**ந்துவிட்டது.

**ஊ) பொரி, பொறி**

குமரன் **பொரி** தின்று கொண்டே **பொறி**யைப் (இயந்திரம்) பழுது பார்த்தான்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இயல் 3

**01. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.**

1. அன் - வந்தனன் **2. இன் - முறிந்தது** 3. கு - காண்குவன் 4. அன் - சென்றன

**02. இனிதென - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.**

**அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிரிவரின் இரட்டும். உயிர்வரின் உக்குறள் மெய்விடடோடும்

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே, தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

**03. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?**

அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்

ஆ) பகுதி, இடைநிலை, சாரியை, விகுதி, விகாரம்

இ) பகுதி, சந்தி, விகாரம், **ஈ) பகுதி, விகுதி**

**04. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| பேசு<br>எழுது<br>வணங்கு | இன்<br>கிறு<br>வ்<br>ஆ | ஆன் |

| | |
|---|---|
| பேசு + இன் + ஆன் - பேசினான் | பேசு + கிறு + ஆன் - பேசுகிறான் |
| எழுது + இன் + ஆன் - எழுதினான் | எழுது + கிறு + ஆன் - எழுதுகிறான் |
| வணங்கு + இன் +ஆன் - வணங்கினான் | வணங்கு + கிறு +ஆன் - வணங்குகிறான் |

| | |
|---|---|
| பேசு + வ் + ஆன் - பேசுவான் | பேசு + ஆ + ஆன் - பேசான் |
| எழுது + வ் +ஆன் - எழுதுவான் | எழுது + ஆ + ஆன் - எழுதான் |
| வணங்கு + வ் + ஆன் - வணங்குவான் | வணங்கு + ஆ + ஆன் - வணங்கான் |

**05. வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்குக.**

| வேர்ச்சொல் | இடைநிலை | விகுதி | சொல் |
|---|---|---|---|
| பார் → | ஆ → | ஆன் → | பார் + ஆ + ஆன - பாரான் |
| காண் → | ஆல் → | ஆள் → | காண + அல் + ஆள் - காணலள் |
| உரை - → | இல் → | அர் → | உரை + இல் + அர் - உரையிலர் |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**04. பின்வரும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு கூறுக.**

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | நாச் / செற் / று | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2. | விக் / குள் / மேல் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3. | வா / ரா / முன் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4. | நல் / வினை | நேர் நிரை | கூவிளம் |
| 5. | மேற் / சென் / று | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6. | செய் / யப் | நேர் நேர் | தேமா |
| 7. | படும் | நிரை | மலர் |
| இக்குறட்பா **மலர்** என்னும் வாய்பாட்டைக் கொண்டு அமைந்தது. | | | |

**04. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

**1. குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.**

குமரனைப் பற்றித் தெரிந்து___ கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை___ தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

**2. அனைத்துத் துறைகளிலும ஆண்களைப் போலவே பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.**

அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும்.

**3. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.**

கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை___ தீமைகளை**ப்** புரிந்து பேசுவர்.

**4. தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.**

தமிழர் ஆற்று**த்** தண்ணீரை**த்** தேக்கி சேமித்து**க்** கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

**5. சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலை நாட்ட செய்தனர்.**

சான்றோர் மிகுந்த___ பொறுப்புடன் சிறப்பான சேவை___ புரிந்து கொள்கையை நிலை நாட்ட**ச்** செய்தனர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் 4**

**01. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?**

உவமை **1.** வினை **2.** பயன் **3.** வடிவம் (மெய்) **4.** உரு (நிறம்) என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும்.

**02. ஒட்டுப் போடாத ஆகாயம் போல -**
**இந்த உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில் பயின்று வருவது**

**அ. உவமை** ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

**03. கீழ்வருவனவற்றுள் 'இறைச்சி' பற்றிய கூற்றைத் தேர்க.**

அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்
ஆ) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்.
இ) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.
**ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.**

**04.** 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

**அ) நற்றிணை** ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

**05.** தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை

அ) 9 ஆ) 3 **இ) 27** ஈ) 13

**05.** நிழல் போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?

அ) விளை ஆ) பயன் **இ) வடிவம்** ஈ) உரு

**இயல் 5**

**01.** ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

ஆசிரியப்பா 4 வகைப்படும். அவை

1) நேரிசை ஆசிரியப்பா 2) இணைக்குறள் ஆசிரியப்பா
3) நிலைமண்டில ஆசிரியப்பா 4) அடிமறிமண்டில ஆசிரியப்பா

**02. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?**

**ஆசிரியப்பாவிற்குரிய சீர்**

நேர் நேர் - தேமா
நிரை நேர் - புளிமா } மாச்சீர்

நிரை நிரை - கருவிளம்
நேர் நிரை - கூவிளம் } விளச்சீர்

(மாச்சீர், விளச்சீர்) } **இயற்சீர்**

நேர் நேர் நேர் - தேமாங்காய்
நிரை நேர் நேர் - புளிமாங்காய்
நிரை நிரை நேர் - கருவிளங்காய்
நேர் நிரை நேர் - கூவிளங்காய் } **காய்ச்சீர்**

**ஆசிரியப்பாவிற்குரிய தளைகள் :**

**1)** நேரொன்றாசிரியத் தளை **2)** நிரையொன்றாசிரியத் தளை

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**03. பொருத்துக : சரியான விடை தரப்பட்டுள்ளது**

**அ)** நேரிசை ஆசிரியப்பா - இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்
**ஆ)** இணைக்குறள் ஆசிரியப்பா - முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும
**இ)** நிலைமண்டில ஆசிரியப்பா - எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்.
**ஈ)** அடிமறிமண்டில ஆசிரியப்பா - அடிகளை மாற்றினாலும் ஓசை குறையாது வரும்.

**04. சரியானதைத் தேர்ந்தெடுக்க :**

**அ)** வரை - மலை **ஆ)** வரை - திருமணம் **இ)** வாரணம் - யானை **ஈ)** புடவி - கடல்

**1) அ ஆ இ - சரி ஈ - தவறு** 2) ஆ இ ஈ - சரி அ - தவறு
3) அ இ ஈ - சரி ஆ - தவறு **4)** அ ஆ ஈ - சரி இ - தவறு

**05. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது**

**அ)** காய் முன் நேர் **ஆ)** காய் முன் நிரை **இ)** கனி முன் நிரை **ஈ) மா முன் நேர்**

**06. ஈரசைச்சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

ஈரசைச்சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் :

**1)** மாச்சீர் **2)** விளச்சீர் **3)** இயற்சீர் **4)** ஆசிரிய உரிச்சீர்

**07. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.**

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் :**

1. **அடி** - அளவடி (எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்று வரும்)
2. **ஓசை** - அகவலோசை
3. **சீர்** - இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.
4. **தளை** - ஆசிரியத்தளை மிகுந்தும் பிற தளை கலந்தும் வரும்.
5. **அடி வரையறை** - மூன்றடி சிற்றெல்லை பேரெல்லை பாடுவோன் கற்பனைக்கேற்ப அமையும்.

**08. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ---- நினை**

**அ)** முகக்குறிப்பு அறிந்தவரை **ஆ)** எண்ணியதை எண்ணியவரை
**இ) மறதியால் கெட்டவர்களை** **ஈ)** சொல்லேர் உழவரை

**09. பொருள் கூறுக**

1. **ஏமம்** - பாதுகாப்பு 2. **மருந்துழைச் செல்வான்** - மருந்தாளுநர்

**இயல் 6**

**01. பகுபத உறுப்பிலக்கணம்**

**அயர்ந்து - அயர் + த் (ந்) + த் + உ**

அயர் - பகுதி
த் - சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**எழுந்த - எழு + த் (ந்) + த் + அ**

எழு - பகுதி
த் - சந்தி (ந் ஆனது விகாரம்)
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**ஈட்டினார் - ஈட்டு + இன் + ஆர்**

ஈட்டு - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை
ஆர் - வினைமுற்று விகுதி

02. **ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வகையில் புணர்ந்த சொல் -**

**அ)** மூதூர் **ஆ)** வெற்றிடம் **இ) நல்லாடை** **ஈ)** பைந்தளிர்

03. **தொடர் அமைத்து எழுதுக**

**அ) அன்றொருநாள் - அன்றொரு நாள்** என் பழைய தோழியைச் சந்தித்தேன்.

**ஆ) நிழலிலிருந்து - நிழலிலிருந்து**விட்டு வந்தபோது வெயில் களைப்பைத் தந்தது.

04. **தொடரை மாற்றி எழுதுக.**

01)**கலவைத் தொடராக மாற்றுக.**

**மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவரகள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.**

மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை **என்பதால்** மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் **சென்று**, சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

02) **வினாத் தொடராக மாற்றுக.**

**தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.**

தஞ்சைக் கோவில் **எவ்வகைக்** கலைப்பாணியில் கட்டப்பட்டது?

03) **செய்தித் தொடராக மாற்றுக.**

**என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை.**

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை **மிகவும் அழகு வாய்ந்தது.**

04) **பொருள் மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக.**

**நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன்.**

நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் **செல்லாமல் இருந்ததில்லை.**

**இயல் 7**

01. **அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் <u>விகுதிகளைக்</u> கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.**

1) வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான். **(ஆளி) - உளவாளி**
2) அறிவைத் தேடிப் போகுமிடம்! உலகம் அறிய உதவுமிடம் **(அகம்)- நூலகம்**
3) வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது.**(மானம்) - வருமானம்**
4) வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன் **(தாரி) - பட்டதாரி**
5) அளந்து அளந்து கொட்டிடுவான்; அகம் மகிழத் தந்திடுவான். **(ஆள்) - படியாள் / பண்ணையாள்**

**02. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம் -**

**அ)** அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் **ஆ)** அடையாறுப் பாலத்தின் சுவரில்
**இ)** அடையாறுப் பாலத்தின் சுவற்றில் **ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்**

**03. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.**

**அ)** காவலாளி **ஆ)** மேலாளர் **இ)** உதவியாளர் **ஈ) ஆசிரியர்**

**04. மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

**01) எதிர்நீச்சல்** - வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளைக் கடந்து **எதிர்நீச்சல்** போட்டு வெற்றி பெறவேண்டும்.

**02) சொந்தக்காலில் நிற்றல்**-என் நண்பன் தன் உழைப்பால் **சொந்தக்காலில்** நின்றான்.

**03) தாளம் போடுதல்** - உயரதிகாரிகளிடம் **தாளம்போட்டு** பிழைப்பு நடத்தல் கூடாது.

**04) மதில் மேல் பூனை** - தன் அம்மாவிற்கும் மனைவிக்கும் இடையில் ஏற்படும் சண்டையில் **மதில் மேல் பூனையாக** மணிவண்ணன் இருந்தான்.

**05) நிறைகுடம்** - அப்துல்கலாம் **நிறைகுடம்** போல் அமைதியாக வாழ்ந்தார்.

**06) கைதூக்கிவிடுதல்**- விவசாயிகள் நலிவுற்றபோது அரசு **கைதூக்கிவிடுதல்** வேண்டும்.

**07) கண்ணாயிருத்தல்** - பெற்றோர் தம் குழந்தைகள் முன்னேற்றத்தில் **கண்ணாயிருத்தல்** வேண்டும்.

**08) அவசரக்குடுக்கை** - என் நண்பன் ஒன்றைச் சொல்லி முடிப்பதற்குள் **அவசரக்குடுக்கை**யாகச் செயல்படுவான்.

**09) முதலைக் கண்ணீர்** - பெற்றோரிடம், தவறு செய்த குழந்தைகள் தான் தவறு செய்யவில்லை என்று **முதலைக்கண்ணீர்** வடிப்பர்.

**10) கானல் நீர்** - முயற்சி செய்யாதவன் வாழ்க்கையில் வெற்றி என்பது **கானல்நீர்** போன்றது.

**இயல் 8**

**01. கூவும்** குயிலும் **கரையும்** காகமும் - **இத்தொடரில் இடம்பெற்ற மரபு**

**அ)** பெயர்மரபு **ஆ)** வினைமரபு **இ) ஒலிமரபு ஈ)** இம்மூன்றும்

**02. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.**

**அ)** நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.

**ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.**

**இ)** இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.

**ஈ)** இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.

**03. “நீளும் கைகளில் தோழமை தொடரும்**
**நீளாத கைகளில் நெஞ்சம் படரும்” - தொடைநயங்களை எடுத்தெழுதுக.**

**மோனை** - **நீ**ளும், **நீ**ளாத
**எதுகை** - நீ**ளு**ம், நீ**ளா**த
**இயைபு** - தொட**ரும்**, பட**ரும்**
**முரண்** - நீளும் **X** நீளாத

**04. நிறுத்தற்குறியிடுக:**
பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16 -ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

“பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்” என்றும், “கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்**கதரிசி**” என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16 -ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

**05. பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்;**
**உணர்ந்து உலகை நோக்குங்கள் - ஒரே தொடராக மாற்றுக.**
பொறுமையைப் பூண்டு அதன் ஆற்றலை உணர்ந்தபின் உலகை நோக்குங்கள்.

**06. தமிழ்த்தென்றல் என்று திரு.வி.க. அழைக்கப்படுகிறார் - இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.**
திரு. வி. கவைத் தமிழ்த்தென்றல் என்று அழைத்தனர்.

## செய்யுள், உரைநடை

### இயல் 1

**01. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

**அ)** சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் **அண்ணா.**

**ஆ)** தொழிலாளர்களின் தந்தை **என்று** அழைக்கப்படுபவர் **கல்யாண சுந்தரனார்**

**இ)** உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் **பாரதிதாசன்**

**ஈ)** பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர் **ஜீவா**

**02. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க**

**அ)** அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
**ஆ)** பவணந்தி முனிவர் - நன்னூல்
**இ)** சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை
**ஈ)** இந்திரன் - பேச்சு மொழியும்

**(i)** அ, ஆ **(ii)** அ, ஈ **(iii) ஆ, ஈ** **(iv)** அ, இ

## இயல் 2

**01. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?**

அ) ஏதிலிக் குருவிகள் - மரபுக் கவிதை

ஆ ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை

**இ) யானை டாக்டர் - குறும்புதினம்**

ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

**02. மண்ணுக்கு வளம் சேர்ப்பன -**

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்

இ) இயற்கை உரங்கள் **ஈ) இவை மூன்றும்**

**03. வான் பொய்த்தது - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்**

அ) வானம் இடித்தது **ஆ) மழை பெய்யவில்லை**

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

**04. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை -**

அ) மதிப்புக் கூட்டுப்பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்

**(i) அ - மட்டும் சரி** (ii) ஆ மட்டும் சரி

(iii) இரண்டும் சரி (iv) அ -சரி, ஆ - தவறு

**05. பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

**இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குநூறு நூல்களுள் ஒன்று**

ஈ) யானைகளால் வெகுதொலைவில் உள்ள நீரினை வாசைன மூலம் அறியமுடியும்.

## இயல் 3

**01. கூற்று** - **"கோடு"** என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

**விளக்கம்** - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

அ) கூற்று சரி, விளக்கம் - தவறு **ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி**

இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு விளக்கமும் தவறு

**02. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?**

அ) பாரதிதாசன் **ஆ) அண்ணாமலையார்** இ) முருகன் ஈ) பாரதியார்

**03. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1) வெள்ளிவீதியார் - அ) புறநானூறு

2) அண்ணாமலையார் - ஆ) சி. சு. செல்லப்பா

3) வாடிவாசல் - இ) குறுந்தொகை

4) இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து

(i) அ ஆ இ ஈ (ii) ஆ ஈ அ இ

**(iii) இ ஈ ஆ அ** (iv) இ ஈ அ ஆ

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**04. துன்பப்படுபவர் ___________**

**அ)** தீக்காயம் பட்டவர் **ஆ)** தீயினால் சுட்டவர்

**இ)** பொருளைக் காக்காதவர் **ஈ) நாவைக் காக்காதவர்**

**04. ஒப்புரவு என்பதன் பொருள் ___________**

**அ)** அடக்கமுடையது **ஆ)** பண்புடையது

**இ) ஊருக்கு உதவுவது** **ஈ)** செல்வமுடையது

**05. விரைந்து கெடுபவன் யார்?**

**அ)** பிறருடன் ஒத்துப் போனவன் தன் வலிமை அறிந்தவன் தன்னை உயர்வாக நினைப்பவன்

**ஆ)** பிறருடன் ஒத்துப் போகாதவன் தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

**இ)** பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.

**ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன் தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்**

**06. வேளாண்மை செய்தற் பொருட்டு - பொருள் கூறுக.**

விடாமுயற்சியுடன் ஈட்டிய பொருளையெல்லாம் தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

**07. பற்று நீங்கியவனுக்கு உண்டாவது - பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது**

**அ)** பற்றுகள் பெருகும் - பொருள்களின் இன்பம் பெருகும்

**ஆ)** பற்றுகள் அகலும் - பொருள்களின் துன்பம் அகலும்.

**இ) பொருள்களின் துன்பம் அகலும் - பற்றுகள் அகலும்**

**ஈ)** பொருள்களின் இன்பம் பெருகும் - பற்றுகள் பெருகும்

**இயல் 4**

**01. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் என்பதாகும்.**

**அ)** நூல் **ஆ)** ஓலை **இ)** எழுத்தாணி **ஈ)** தாள் **(விடை - நூல் / ஓலை)**

**02. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

**01. கால்நடை / கால் நடை**

- **கால்நடைகளை** மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக் கொண்டு சென்றார்கள்.
- அருகில் உள்ள கடைக்குக் **கால் நடை**யாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.

**02. பிண்ணாக்கு / பிள்நாக்கு (பிளவு பட்ட நாக்கு)**

- மாடு **பிண்ணாக்கு** தின்னும்
- பாம்பிற்குப் **பிள்நாக்கு** உண்டு.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**03. எட்டுவரை / எள்துவரை**

- அம்மா குழந்தையை ஒன்று முதல் **எட்டு வரை** எழுதக் கூறினாள்.
- **எள்ளும் துவரையும்** வயலில் விளைந்துள்ளது.

**04. அறிவில்லாதவன் / அறிவில் ஆதவன் (அறிவில் சிறந்தவன்)**

- கண்ணன் தன் நண்பனை **அறிவில்லாதவன்** என்று கூறினான்.
- கண்ணன் தன் நண்பனை **அறிவில் ஆதவன்** என்று பாராட்டினான்.

**05. தங்கை / தம் கை**

- என் **தங்கை** நன்றாகப் பாடுவாள்.·.
- **தம் கையால்** பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் என் அப்பா.

**06. வைகை / வை கை**

- **வைகை** ஆற்றில் வெள்ம் பெருக்கெடுத்து ஓடியது.
- மண்ணில் **கை வை**க்காதே என்று குழந்தையை அம்மா எச்சரித்தாள்.

**07. நஞ்சிருக்கும் / நஞ்சு இருக்கும்**

- நீண்ட நாட்கள் பயன்படுத்தியதால் துணி **நஞ்சிருக்கும். (நைந்து இருக்கும்)**
- தேளின் கொடுக்கில் **நஞ்சு இருக்கும்.**

**இயல் 5**

**01. பொருந்தாததைத் தேர்க.**

**அ)** ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.
**ஆ)** ஒவ்வொருநாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்.
**இ)** ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18-ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.
**ஈ)** ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத்திங்கள் தேவைப்பட்டன.

**(i)** அ, ஆ **(ii)** ஆ, இ **(iii)** அ, இ **(iv) ஆ, ஈ**

**02. ஆனந்தரங்கருக்கத் தொடர்பில்லாத குறிப்பு எது?**

**அ)** மொழிபெயர்ப்பாளர் **ஆ)** இந்தியாவின் பெப்பிசு
**இ)** தலைமைத் துவிபாஷி **ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை**

**03. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (கம்பு, மை, வளை, இதழ், ஆழி)**

1. எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் - **வளை**
2. அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் - **கம்பு**
3. கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம். - **மை**
4. அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுதான் - **மதி**
5. பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே - **இதழ்**
6. வண்டியையும் இயக்கும்; பெரும்கப்பலையும் தாங்கும் - **ஆழி**

04. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து நினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
**இ) மறதியால் கெட்டவர்களை** ஈ) சொல்லேர் உழவரை

இயல் 6

01. கூற்று 1
**தஞ்சைப் பெரிய கோவிலிலுள்ள ஓவியங்களை எஸ். கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.**
கூற்று 2
**அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.**

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி **ஈ) கூற்று இரண்டும் சரி**

02. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது -

**அ) சிற்றிதழ் - குற்றாலக் குறவஞ்சி** ஆ) கவிதைநூல் - திருச்சாழல்
இ) நாளிதழ் - நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல் - குற்றாலக் கோவை

03. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று.

**அ) சாழல்** ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

இயல் 7

01. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை
**இ) மக்கள் வெள்ளம்** ஈ) மக்கள் அவை

02. **கூற்று** : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம்சார்ந்த நூல்.
**காரணம்** : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்

அ) கூற்று சரி; காரணம் தவறு **ஆ) இரண்டும் சரி**
இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு; காரணம் சரி

03. **'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்'** - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
**இ) அமைச்சர் மன்னரிடம்** ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

இயல் 8

01. **பூஜை, விஷயம், உபயோகம்** - என்பவை முறையே _____ என்று தமிழில் வழங்கப்படும்.

**அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு** ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி

02. **யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்?** - இது எவர் மொழி?

அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் **இ) நடராசன்** ஈ) புல்

**03. தமிழின் முதல் பாவடிவ நூல் -**

**அ)** இரகசிய வழி **ஆ) மனோன்மணீயம்**✓

**இ)** நூல்தொகை விளக்கம் **ஈ)** திருவிதாங்கூர் அரசர் வரலாறு

**04. பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள் -** ஒரே தொடராக மாற்றுக.

பொறுமையைப் **பூண்டு, அதன்** ஆற்றலை **உணர்ந்த பின்** உலகை நோக்குங்கள்.

----- -----

**பொருத்துக:**

**இயல் 3 - திருக்குறள்**

**01. பொருத்துக: சரியான விடை**

**அ)** வாழ்பவன் - ஒத்ததறிவான்

**ஆ)** வாழாதவன் - இசையொழித்தவன்

**இ)** தோன்றுபவன் - புகழ் தரும் பண்புடையவன்

**ஈ)** வெல்ல நினைப்பவன் - காத்திருப்பவன்

**உ)** பெரும்பண்புடையவன் - மருந்தாகும் மரமானவன்

**இயல் 4**

**02. பொருத்துக (விடை தேர்க)**

**அ)** கல்வி அழகே அழகு - 1. தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைப்பாடல்

**ஆ)** இளமையில் கல் - 2. திருமந்திரம்

**இ)** துணையாய் வருவது தூயநற்கல்வி - 3. ஆத்திசூடி

**ஈ)** பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்- 4. திருக்குறள்

- 5. நாலடியார்

**(i)** 2 3 4 1 **(ii)** 3 4 1 2 **(iii) 5 3 2 1** **(iv)** 4 1 2 5

**03. பொருத்துக. சரியான விடை**

**அ)** தொல்காப்பியம் - இலக்கண நூல்

**ஆ)** திருக்குறள் - அற நூல்

**இ)** புறநானூறு - சங்கநூல்

**ஈ)** திருவாசகம் - பக்தி நூல்

**இயல் 6**

**அ)** விரியன் - 1. தண்டை

**ஆ)** திருகுமுருகு - 2. காலாழி

**இ)** நாங்கூழ்ப்புழு - 3. சிலம்பு

**ஈ)** குண்டலப்பூச்சி - 4. பாடகம்

**(i)** 3 4 2 1 **(ii) 3 1 4 2** **(iii)** 4 3 2 1 **(iv)** 4 1 3 2

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**தமிழாக்கம் தருக.**

**இயல் 1**

01. The pen is mightier than the sward.

-கத்தி முனையைவிட பேனாமுனை கூர்மையானது.

02. Winners don't do different things, they do things differently.

-வெற்றியாளர்கள் மாறுபட்ட செயலைச் செய்யாமல், செய்வதையே வித்தியாசமாக செய்ய முயற்சிப்பார்கள்.

03. A picture is worth a thousand words.

-ஓர் ஓவியம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.

04. Work while you work and play while you play.

வேலை செய்யும்போது வேலையிலும்; விளையாடும்போது விளையாட்டிலும கவனம் வை.

05. Knowledge rules the world.

அறிவே உலகை ஆள்கிறது.

**இயல் 2**

01. Just living is not enough, One must have sunshine, freedom and a little flower

- Hans Anderson

பெயருக்கு வாழ்வது வாழ்க்கையல்ல. ஒவ்வொருவருடைய வாழ்க்கை ஒளிமயமானதாகவும், சுதந்திரமானவும், மலர்களைப் போன்று மணமும் அழகும் உள்ளதாக அமைய வேண்டும். - ஹான்ஸ் ஆன்டர்சன்

02. In nature, light creates the colour. In the picture, colour creates the light.

- Hans Hoffmann

இயற்கை ஒளி வண்ணங்களை உருவாக்குகிறது. ஓவியம், வண்ணங்கள் ஒளியை உருவாக்குகிறது - ஹான்ஸ் ஹாப்மன்

03. Look deep into nature and then you will understand everything better.

- இயற்கையை ஆழமாகப் பாருங்கள், அனைத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் Albert Einstein

04. Simplicity is nature's first step, and the last of art – Philip James Bailey

எளிமை என்பது இயற்கையின் முதல் படி; அதுவே கலையின் இறுதிப்படி ஆகும்.

- பிலிப் ஜேம்ஸ் பெய்லி

05. Roads were made for journeys not destination. – Confucius

பாதைகள் என்பது பயணங்களுக்கானது, இலக்குகளுக்கானது அல்ல

.- கன்பூசியஸ்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இயல் 3**

01. Education is the most powerful weapon. Which you can use to change the world.
கல்வி ஓர் ஆற்றல் வாய்ந்த ஆயுதம். அதனைக் கொண்டு உலகை மாற்றலாம்.

02. Looking at the beauty in the world is the first step of purifying the mind.
உலகில் உள்ள இயற்கை அழகை இரசிப்பது மனதைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் படியாகும்.

03. Culture does not make people. People make culture.
கலாச்சாரம் மனிதர்களை உருவாக்கவில்லை; மனிதர்களே கலாச்சாரத்தை உருவாக்குகிறார்கள்.

04. A people without the knowledge of their past history and culture is like a tree without roots.
தங்களுடைய கடந்தகால வரலாற்றையும், கலாச்சாரத்தையும் அறிந்திராத மனிதர்கள் வேர் இல்லாத மரம் போன்றவர்கள்.

05. A nation's culture resides in the hearts and in the soul of people.
ஒரு நாட்டின் கலாச்சாரம் அந்த மக்களின் மனதிலும், ஆன்மாவிலும் வாழ்கிறது.

**இயல் 8**

01. An eye for an eye only ends up making the whole world blind.
கண்ணுக்குக் கண் என்று செயல்பட்டால் அது இந்த உலகம் முழுவதையும் குருடாக்கிவிடும்.

02. You must be the change you wish to in the world.
இந்த உலகத்தில் மாற்றத்தைக் காண விரும்பினால் நீ கண்டிப்பாக மாற வேண்டும்.

03. The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
கோழைகளால் ஒருபோதும் மன்னிக்க முடியாது. மன்னித்தல் என்பது வலிமை மிக்கவர்களின் பண்பாகும்.

04. Nobody can hurt me without my permission.
என் அனுமதியில்லாமல் யாரும் என்னைப் புண்படுத்த முடியாது.

05. You must not lose faith in humanity. Humanity is a ocean; if a few drops of the ocean are dirty, the ocean does not become dirty. – Mahathma Gandhi
நீங்கள் மானுடத்தின் மீது இருக்கும் நம்பிக்கையை ஒருகாலும் இழந்துவிடக் கூடாது. மானுடம் என்பது கடல் போன்றது. கடலில் ஒரு சில துளி கழிவு கலந்தால் கடல் முழுவதும் கழிவாகிவிடாது.

www.Padasalai.Net

**பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. (இயல் 1)**

| பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் | பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|
| வாடகை | குடிக்கூலி | விசா | நுழைவாணை |
| மாதம் | திங்கள் | பாஸ்போர்ட் | கடவுச்சீட்டு |
| போலீஸ் | காவலர் | கம்பெனி | குழுமம் |
| நிச்சயம் | உறுதி | பத்திரிகை | செய்தித்தாள் |
| உத்திரவாதம் | பொறுப்பு, பிணை | கோரிக்கை | வேண்டுகோள் |
| சந்தோஷம் | மகிழ்ச்சி | தருணம் | தக்க சமயம் |
| சம்பளம் | ஊதியம் | ராச்சியம் | ஆட்சி |
| ஞாபகம் | நினைவு | சரித்திரம் | வரலாறு |
| வருடம் | ஆண்டு | முக்கியத்துவம் | இன்றியமையாமை |
| தேசம் | நாடு | சொந்தம் | தனக்குரியது |
| வித்தியாசம் | வேறுபாடு | சமீபம் | அண்மை |
| உற்சாகம் | ஊக்கம், மனஎழுச்சி | யுகம் | காலத்தை அளக்கும் அலகுகளில் ஒன்று |

**கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.**

01. சங்கீதம் - இசை
02. வித்தியா - அறிவு
03. மகாஜனம் - அதிகாரம் பெற்றவர்
04. சாகரம் - கடல்

**கலைச்சொல் அறிவோம்**

அழகியல் - Aesthetics
கலை விமர்சகர் - Art critic
புலம்பெயர்தல் - Migration
இயற்கை வேளாண்மை - Organic Farming
வேதி உரங்கள் - Chemical Fertilizers
தூக்கணாங்குருவி - Weaver Bird
அறுவடை - Harvesting
புவிச்சூழல் - Earth Environment
வேர்ச்சொல் அகராதி - Etymological Dictionary
பண்பாட்டுக் கூறுகள் - Cultural Elements
உள்கட்டமைப்பு - Infrastructure
செம்மொழி - Classical Language
ஆவணம் - Document
ஒப்பந்தம் - Agreement
பண்பாடு - Culture
நுண்கலைகள் - Fine Arts
தானியக்கிடங்கு - Grain Warehouse

இதழாளர் - Journalist
புத்தக மதிப்புரை - Book Review
மெய்யிலாளர் - Philosopher
வேர் முடிச்சுகள் - Root Nodes
ஓட்டு விதை - Shell seeds
தொழு உரம் - Farmyard Manure
இனக்குழு - Ethnic Group
முன்னொட்டு - **Prefix**
பின்னொட்டு - **Suffix**
மூதாதையர் - Ancestor
மதிப்புக்கல்வி - Value Education
மன ஆற்றல் - Mental Abilities
உப்பங்கழி - Backwater
படையெடுப்பு - Invasion
மாலுமி - Sailor
ஆவணப்படம் - Documentary
பேரழிவு - Disaster

www.Padasalai.Net

| | |
|---|---|
| கல்வெட்டு | - Inscription / Epigraph |
| உத்திகள் | - Strategies |
| தொழிற்சங்கம் | - Trade Union |
| பன்முக ஆளுமை | - Multiple Personality |
| நாங்கூழ்ப் புழு | - Earthworm |
| உலகமயமாக்கல் | - Globalisation |
| பொருள்முதல் வாதம் | - Materialism |
| உணர்ச்சி | - Emotion |
| மின் இழுவை | - Escalator |
| கூட்டு உடற்பயிற்சி | - Mass Drill |
| சராசரி | - Average |
| உயர்நீதிமன்றம் | - High court |
| பணி | - Service |
| மருத்துவம் | - Medicine Idols |
| சிலைகள் | - Idols |
| அடுக்குமாடிக் குடியிருப்பு | - Apartment |
| முனைவர் பட்டம் | - Doctor of Philosophy (Ph.D) |
| மதிப்புக்கூட்டுப் பொருள் | - Value Added Product |

| | |
|---|---|
| தொன்மம் | - Myth |
| சமத்துவம் | - Equality |
| பட்டிமன்றம் | - Debate |
| புனைபெயர் | - Pseudonym |
| விழிப்புணர்வு | - Awareness |
| கடவுச்சீட்டு | - Passport |
| ஆளுமை | - Personality |
| நெகிழி | - Plastic |
| வைக்கோல் | - Straw |
| தோட்டக்கலை | - Horticulture |
| கல்லூரி | - College |
| வரலாறு | - History |
| மதம் | - Religion |
| அறிவியல் | - Science |
| தத்துவம் | - Philosophy |

## படைப்பாற்றல் திறன்

**மாணவர் கவனத்திற்கு,**

**எண்ணங்களை எழுத்தாக்குக மற்றும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக - இவ்விரண்டு வினாக்களும் உங்கள் கற்பனையாற்றல், படைப்பாற்றல் திறன்களை பெருக்கிக் கொள்வதற்கான வினாக்கள். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் விடைகள் எடுத்துக்காட்டுகளே. வினாவிற்குரிய மையக்கருத்தைக் கவனத்தில் கொண்டு நீங்கள் எண்ணியதை சிறப்பான முறையில் விடையாக எழுதவும்.**

## எண்ணங்களை எழுத்தாக்குக

**இயல் 1**

**பறவையின் அவலக் குரல்!!**



அன்று, காகம் பானையில் கற்களைப் போட்டு தன் தாகத்தைத் தணித்துக் கொண்டது. எங்கள் தாகம் தணிக்க வீடுகள்தோறும் சட்டிகளில் நீர் நிரப்பி வைத்தனர். எங்கள் தாகமும் தணிந்தது. இன்று நீர் நிலைகள், மரங்கள் இருந்த இடமெங்கும் பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள், தொழிற்சாலைகள் ...
மழைக்காலத்தில் வெள்ளத்தில் மிதக்கின்றோம்;
கோடை காலத்தில் தாகத்தில் தவிக்கின்றோம்.
மக்களே சிந்திப்பீர்!

**'நீரின்றி அமையாது உலகு'- என்பதனை'**

**இயல் 2 ஒற்றை மரத்தில் கிடைத்த ஞானம்**



மரங்களை வெட்டும்போது எனக்குத் தெரியவில்லை களைப்பு.
இந்த ஒற்றைமரம் தந்தது நிழல்! காடுகளை அழித்து
அடுக்குமாடிகளும், காற்றை மாசுபடுத்தும் தொழிற்சாலைகளும்
நச்சுக் காளான்களாய் முளைத்தன. இயற்கை
சுவாசக்காற்றை மறந்து செயற்கை சுவாசக்காற்றை
சுவாசிக்கும் நிலை.. அந்தோ! பரிதாபம்.. விழித்தெழுந்தேன்!
இனி ஆங்காங்கே விதைப்பந்துகளைத் தூவி
பூமிப்பந்தைக் காத்திடுவேன்!
ஒற்றை மரமே எனக்கு ஞானம் அளித்த போதிமரம்.

**மரங்களை வளர்ப்போம்! இயற்கையோடு வாழ்வோம்!**

**இயல் 4 உயர்கல்வியும் சுயவேலை வாய்ப்பும்**



'படித்தோம்; பட்டம் பெற்றோம்' என்ற நிலை மாறிட வேண்டும். தொழிற்கல்வி கற்பதனால் சுயதொழில் தொடங்கலாம். விளையாட்டு, விவசாயம், அறிவியல், சட்டம், கலைத்துறை எனப் பல துறை சார்ந்த கல்வி கற்று வாழ்வில் உயர்வடையலாம். பணியில் சேரும்போதே ஆறு இலக்க வருமானத்தையும், காரில் பயணிக்க வேண்டும், குளிர்சாதன அறையில் பணி புரிய வேண்டும் என்ற கனவுடன் வாழ்கின்றனர். கடுமையான உழைப்பும், முயற்சியும் இருந்தால் மட்டுமே அவ்வெண்ணம் கைகூடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**'உழைப்பின்றி ஊதியமில்லை' "No Pain No Gain"**

**இயல் 5 வண்ணச் சிறகடிக்கும் தேனீ**



உலகத்து உயிரினங்களில் அபூர்வமான உயிரினம் தேனீக்கள். அவை மரம், செடி, கொடிகள் பூப்பூத்துக் காய் காய்ப்பதற்கு முக்கிய காரணமாகிறது. இயற்கை மருந்துப் பொருளாகவும் பயன்படுகிறது. மலைத்தேன் சுவையானது. அறுகோணத்தில் அழகாக கூடு கட்டும் தேனீ வளர்ப்பு விவசாயிகளுக்கும், சிறுதொழில் தொடங்குவோர்க்கும் வாழ்வாதாரமாக விளங்குகிறது. கேட்பதற்கு இனிமையாக இருக்கும். சுறுசுறுப்பிற்கும் கூட்டுமுயற்சிக்கும் உதாரணமாய் விளங்குபவை .தேனீக்கள்.

**இயல் 8 என் வீட்டு செல்லப்பிள்ளை நீ**



உன்னிடம் இருக்கும் அன்பும் நன்றியும் யாரிடமும் இருப்பதில்லை
சத்தம் கேட்டு குரைக்கிறாய்; உணவிட்டால் வாலை ஆட்டுகிறாய்...
பிரிந்தால் மனம் வாடுகிறாய்...
உன் அருகில் அமர்ந்தால் கவலைகள் மறக்கிறேன்.
என் அன்பை உன்னால் உணரமுடிகிறது.
ஆயிரம் வார்த்தைகள் புரிகிற உனக்கு
பேச மட்டும் முடிவதில்லை..
உன்னை ரசனையோடு ரசிக்கின்றேன் ...

**பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.**

**இவ்வினாவிற்கு பின்வரும் தலைப்புகளில் விடையளிக்க வேண்டும்.**


1. பழமொழி விளக்கம் 2. வாழ்க்கை நிகழ்வு 3. நீதி

**பழமொழிகள் :**

01. **அ**கத்தின் அழகு முகத்தில் தெரியும்
02. **ஆ**த்திரக்காரனுக்கு புத்தி மட்டு
03. **இ**க்கரைக்கு அக்கரை பச்சை
04. **இ**ளமையில் கல்
05. **உ**ழைப்பே உயர்வு தரும்
06. **ஐ**ந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது
07. **ஒ**ன்றுபட்டால் உண்டு வாழ்வு / ஒற்றுமையே பலம் / கூடிவாழ்ந்தால் கோடி நன்மை
08. **கா**லம் பொன் போன்றது
09. **கா**ற்றுள்ள போதே தூற்றிக் கொள்
10. **கு**ற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
11. **சி**றுதுரும்பும் பல் குத்த உதவும் / வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
12. **சி**றுதுளி பெருவெள்ளம்
13. **சு**டர்விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.
14. **த**ன் கையே தனக்கு உதவி
15. **நு**ணலும் தன் வாயால் கெடும்
16. **நோ**யற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்
17. **ப**தறிய காரியம் சிதறும்
18. **பே**ராசை பெருநட்டம்
19. **போ**தும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து
20. **மி**ன்னுவதெல்லாம் பொன்னல்ல
21. **மு**யற்சி திருவினை ஆக்கும்
22. **யா**னைக்கும் அடி சறுக்கும்
23. **வ**ருமுன் காப்பது நல்லது
24. **வ**ல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
25. **வி**ளையும் பயிர் முளையிலே தெரியும்

**இயல் 5**

**கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.**




www.Padasalai.Net

**விடை :** ஐவகை இலக்கணங்களுள் பொருள் இலக்கணம் ஒன்று. பொருள் இலக்கணம் 1. அகப்பொருள் 2. புறப்பொருள் என இருவகைப்படும். அகப்பொருள் மூன்று வகைப்படும். 1. முதற்பொருள் 2. கருப்பொருள் 3. உரிப்பொருள் என்பன. முதற்பொருளில் 1. நிலமும் 2. பொழுதும் அடங்கும். பொழுதுகள் 1. சிறுபொழுது 2. பெரும்பொழுது என இருவகைப்படும்..

**இயல் 7**

நீங்கள் **பேருந்து நிறுத்தத்தில்** நின்று கொண்டிருக்கிறீர்கள். வழி தெரியாத ஒருவர், உங்களிடம் வந்து **நகலகத்திற்கு** வழி கேட்கிறார். கீழ்க்காணும் வரைபடத்தைக் கொண்டு, அப்புதியவருக்கு வழிகாட்டுங்கள் .....

**அன்பு மாணவர்களே! உங்களுக்குத் தெரியாத வழியா? நீங்களே இவ்வினாவிற்குரிய விடையை சுலபமாக எழுதிவிடலாம்.**




**விடை எழுதுக :**

www.Padasalai.Net

## இலக்கிய நயம் பாராட்டுக

**இயல் 2**

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!

வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!

கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாசே1

**- கவிமணி**

**ஆசிரியர் குறிப்பு** : பெயர் சொன்னாலே பெருமிதப்படக் கூடிய மாபெரும் கவிஞர்களுள் **கவிமணி தேசிக விநாயகமும்** ஒருவர். இவரது பாடல்கள் அனைத்தும் எளிமையாகவும், இனிமையாகவும், இனிய ஓசை உடையதாகவும் இருக்கும்.

**திரண்ட கருத்து** :

கோடிக்கணக்கான விண்மீன்கள் உன்னைச் சூழ வெள்ளி ஓடம் போல உலவிவரும் வெண்ணிலாவே! வளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும் தேய்ந்து போனதேன் வெண்ணிலாவே! கூகை, ஆந்தை போல பகல் கூட்டினில் உறங்குகின்றாயோ வெண்ணிலாவே! உன்னைப் பந்தாக நினைத்து ஆடிடுவோம் என நினைத்து உலகில் வர அச்சம் கொண்டாயோ வெண்ணிலாவே!

**மையக்கருத்து** : கவிமணி, வெண்ணிலாவின் அழகினை தம் கற்பனையில் அழகாக எடுத்துரைக்கின்றார்.

**தொடை நயம்** : தொடுக்கப்படுவது தொடை. செய்யுளில் **மோனை, எதுகை, முரண், இயைபு** ஆகியன அமையும் முறையைக் குறிப்பது தொடை நயம் ஆகும்.

**மோனை** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **முதலெழுத்து** ஒன்றி வருவது **மோனை** ஆகும்.
**சான்று** : **கூ**கை - **கூ**ட்டினில்; **வெ**ள்ளியோடம் **வெ**ண்ணிலாவே; :

**எதுகை** :செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது **எதுகை** ஆகும்.
**சான்று** : வெ**ண்**ணிலாவே - வெ**ண்**ணிலாவே

**இயைபு** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இறுதி எழுத்தோ** அல்லது **இறுதிச் சீரோ** ஒன்றி வருவது **இயைபு** ஆகும்.
**சான்று** : வெண்ணிலாவே! - வெண்ணிலாவே!

**முரண்** : செய்யுளில் **எதிர்ச்சொற்களாக** வருவதே **முரண்** எனப்படும்.
**சான்று** : வளர்ந்து **X** வாடி (தேய்ந்து)

**சந்தம்** : செய்யுளுக்கு அழகு சேர்ப்பது **சந்தம்.** இப்பாடலை சந்த நயத்துடன் பாடி மகிழலாம்

**அணி** : இப்பாடலில் **உவமை அணி** பயின்று வந்துள்ளது. **'போல'** என்னும் உவமஉருபு வெளிப்படையாக வந்துள்ளது.
**சான்று** : வெள்ளியோடம் **போல;** கூகை ஆந்தை **போல**

**தலைப்பு** : **வெண்ணிலவே!**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் 4**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

**- பாரதியார்**

**ஆசிரியர் குறிப்பு** : பெயர் சொன்னாலே பெருமிதப்படக் கூடிய மாபெரும் கவிஞர்களுள் **மகாகவி பாரதியாரும்** ஒருவர். இவரது பாடல்கள் அனைத்தும் எளிமையாகவும், இனிமையாகவும், இனிய ஓசை உடையதாகவும் எழுச்சி மிக்கதாகவும் இருக்கும்.

**திரண்ட கருத்து** : பூமியைக் காத்திடும் இறைவன் பெண்களுக்கு அறிவை வைத்தான். சில மூடர் பெண்களின் அறிவைக் கெடுத்தனர். இரு கண்களாக ஆண் பெண் திகழ்கின்றனர். இவ்விரு கண்களில் ஒன்றைக் காயப்படுத்தி பார்வையைக் கெடுத்திடலாமோ? பெண்கள் கல்வி அறிவைப் பெற்றால் இவ்வுலகில் அறியாமை என்னும் இருளைப் போக்கிடலாம் எனப் பாரதியார் குறிப்பிடுகிறார்.

**மையக்கருத்து** : பெண்கள் கல்வி கற்பதன் அவசியத்தைப் பாரதியார் இப்பாடலில் வலியுறுத்துகிறார்.

**தொடை நயம்** : தொடுக்கப்படுவது தொடை. செய்யுளில் **மோனை, எதுகை, முரண், இயைபு** ஆகியன அமையும் முறையைக் குறிப்பது தொடை நயம் ஆகும்.

**மோனை** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **முதலெழுத்து** ஒன்றி வருவது **மோனை** ஆகும்.
**சான்று** : **பெ**ண் - **பே**ணி; **ம**ண் - **மா**தர்

**எதுகை** :செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது **எதுகை** ஆகும்.
**சான்று** : பெ**ண்** - ம**ண்** - க**ண்**

**சந்தம்** : செய்யுளுக்கு அழகு சேர்ப்பது **சந்தம்.** இப்பாடலை சந்த நயத்துடன் பாடி மகிழலாம்.

**அணி** : பெண்களுக்குக் கல்வி அறிவு வேண்டும் என்பதை இயல்பாகக் கூறியுள்ளதால் இப்பாடலில் **இயல்பு நவிற்சி அணி** பயின்று வந்துள்ளது.

**தலைப்பு** : **பெண் கல்வி**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் 5**

செந்நெலும் கரும்பும் விளைந்தனவே - நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழிக - தேகம்
எழிலுடன் கூடியே நலமுறுக

பிரிவுகள் பேசியே பூசலிட்ட - பழம்
பேதமை தனைத்தள்ளி அனைவருமே
ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் - நம்முள்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்

தமிழன் திருநாள் பொங்கலென்றால் - அதில்
தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?
புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே - யாரும்
புறம்பிலை என்றுசொல் தமிழன்றோ?

யாதும் ஊரெனச் சாற்றியதும் - மக்கள்
யாவரும் கேளிர் என்றதுவும்
மேதினிக் குரைத்தவர் நம்முன்னோர் - இன்று
வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ?

**- பெ. தூரன்**

**ஆசிரியர் குறிப்பு** : பெயர் சொன்னாலலே பெருமிதப்படக் கூடிய மாபெரும் கவிஞர்களுள் **பெ. தூரனும்** ஒருவர். இவரது பாடல்கள் அனைத்தும் எளிமையாகவும், இனிமையாகவும், இனிய ஓசை உடையதாகவும் இருக்கும்.

**திரண்ட கருத்து** : செந்நெல்லும் கரும்பும் விளைந்தன; தேன் சொரிகின்ற மலர்கள் விரிந்தன. துன்பமும், பசியும் ஒழியட்டும் நாடு அழகுடன் நலமுற விளங்கட்டும்.

பிரிவுகளைப் பேசியே சண்டையிட்ட அறியாமையை ஒழித்து அனைவரும் ஒரே குடும்பமாய் வாழ்ந்திடுவோம். நம்மிடையே ஒற்றுமையை ஓங்கச் செய்திடுவோம்.

தமிழரின் திருநாள் பொங்கல் என்றால் அதில் தமிழனின் பண்புகளும் பொங்கும். புவியெல்லாம் சேர்ந்து ஒரே வீடாகி அதில் யாரும் புறம்பில்லை என்றது தமிழ்தானே!

நமது முன்னோர் எல்லாம் நமது ஊர் என்றும் அனைவரும் நமது உறவினர் என்றும் உலகிற்கு உணர்த்தினர். ஆனால் இன்று நாம் அதில் வேற்றுமை காண்பது சரியோ?

**மையக்கருத்து** : கவிஞர் இப்பாடலில் ஒருமைப்பாட்டுணர்வை வலியுறுத்துகின்றார்.

**தொடை நயம்** : தொடுக்கப்படுவது தொடை. செய்யுளில் **மோனை, எதுகை, முரண், இயைபு** ஆகியன அமையும் முறையைக் குறிப்பது தொடை நயம் ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மோனை :** செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **முதலெழுத்து** ஒன்றி வருவது **மோனை** ஆகும்.
**சான்று : பி**ரிவுகள் - **பே**தமை; **ஒ**ருதனி - **ஒ**ற்றுமை

**எதுகை :**செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது **எதுகை** ஆகும்.
**சான்று :** த**மி**ழன் - த**மி**ழன்; யா**து**ம் - யா**வ**ரும்

**இயைபு :** செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இறுதி எழுத்தோ** அல்லது **இறுதிச் சீரோ** ஒன்றி வருவது **இயைபு** ஆகும்.
**சான்று :** பொங்குமன்**றோ** - தமிழன்**றோ**

**முரண் :** செய்யுளில் **எதிர்ச்சொற்களாக** வருவதே **முரண்** எனப்படும்.
**சான்று :** ஒற்றுமை **X** வேற்றுமை

**சந்தம் :** செய்யுளுக்கு அழகு சேர்ப்பது **சந்தம்.** இப்பாடலை சந்த நயத்துடன் பாடி மகிழலாம்.

**அணி :** மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்ற கருத்தை இயல்பாகக் கூறியுள்ளதால் **இயல்பு நவிற்சி அணிக்குப்** பொருத்தமாயிற்று.

**தலைப்பு : யாதும் ஊரே! யாவரும் கேளிர்!**

**இயல் 6**

"தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ"

**- கம்பர்**

**ஆசிரியர் குறிப்பு :** பெயர் சொன்னாலே பெருமிதப்படக் கூடிய மாபெரும் புலவர்களுள் **கவிக் கம்பரும்** ஒருவர். இவர் இயற்றிய இராமாயணம் இதிகாசங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. இந்நூலில் உள்ள பாடல் ஒன்றின் நயத்தை இங்குக் காணலாம்.

**திரண்ட கருத்து :** குளக்கரையில் அமைந்த பூஞ்சோலைகளில் மயில்கள் ஆடுகின்றன. தாமரை மலர்கள் விளக்குகளாய் உயர்ந்து நிற்கின்றன. இடியோசை மயில்களின் நடனத்துக்கு தாளம் வாசிக்கிறது. குவளை மலர்கள் அக்காட்சியைக் கண்விரித்துப் பார்க்கின்றன. குளத்தின் குளிர்ந்த நீரலைகள் நடன அரங்கத்தின் திரைகளாக அமைகின்றன. இன்னிசை பொழியும் மகரயாழைப் போல வண்டுகள் ரீங்காரமிடுகின்றன. இத்தகைய அரங்கத்தில் மருதநாயகி வீற்றிருப்பது போன்று இருந்தது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மையக்கருத்து** : மருதநிலத்தின் வளத்தைக் கம்பர் இங்கு அழகுற வருணித்துள்ளார்.

**தொடை நயம்** : தொடுக்கப்படுவது தொடை. செய்யுளில் **மோனை, எதுகை, முரண், இயைபு** ஆகியன அமையும் முறையைக் குறிப்பது தொடை நயம் ஆகும்.

**மோனை** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **முதலெழுத்து** ஒன்றி வருவது **மோனை** ஆகும்.
**சான்று** : **த**ண்டலை - **தா**மரை

**எதுகை** :செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது **எதுகை** ஆகும்.
**சான்று** : த**ண்**டலை - கொ**ண்**டல் - தெ**ண்**திரை - வ**ண்**டுகள்

**இயைபு** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இறுதி எழுத்தோ** அல்லது **இறுதிச் சீரோ** ஒன்றி வருவது ஆகும்.
**சான்று** : தாங்**க** - நோக்**க**

**சந்தம்** : செய்யுளுக்கு அழகு சேர்ப்பது **சந்தம்.** இப்பாடலை சந்த நயத்துடன் பாடி மகிழலாம்.

**அணி** : கம்பர் இயற்கைக் காட்சியை அழகுறக் கூறுவதால் **உயர்வுநவிற்சி அணிக்குப்** பொருத்தமாயிற்று.

**தலைப்பு : மருதநில வளம்**

**இயல் 7**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
புதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அதுவேண்டும்.

**- நாமக்கல் கவிஞர்**

**ஆசிரியர் குறிப்பு** : பெயர் சொன்னாலலே பெருமிதப்படக் கூடிய மாபெரும் கவிஞர்களுள் **நாமக்கல் கவிஞரும்** ஒருவர். இவரது பாடல்கள் அனைத்தும் எளிமையாகவும், இனிமையாகவும், இனிய ஓசை உடையதாகவும் இருக்கும். **காந்தியக் கவிஞர்** என்ற சிறப்புப் பெயரும் இவருக்கு உண்டு.

**திரண்ட கருத்து** : மக்களுக்கு சுதந்திரம் தருகின்ற மகிழ்ச்சியைக் காட்டிலும் சுகம் தரும் உணர்ச்சி வேறு எதுவும் கிடையாது. சொல்லினால் கிடைக்கும் புகழ்ச்சியும், பணத்தினால் கிடைக்கும் ஆடம்பரமும் அதைவிடக் கீழானது. மனதிற்கு நிம்மதி தரக்கூடிய அறச்செயல்கள், புகழுடன் வாழ்தல் எல்லாமே சுதந்திரம் இருந்தால்தான் மட்டுமே கிடைக்கும். தருகின்ற துயர்களை நிமிர்நது நின்று எதிர்த்திட நிச்சயம் சுதந்திரம் வேண்டும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மையக்கருத்து:** சுதந்திரம் பெறுவதன் அவசியத்தைக் கவிஞர் இப்பாடலில் எடுத்துரைக்கின்றார்.

**தொடை நயம் :** தொடுக்கப்படுவது தொடை. செய்யுளில் **மோனை, எதுகை, முரண், இயைபு** ஆகியன அமையும் முறையைக் குறிப்பது தொடை நயம் ஆகும்.

**மோனை :** செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **முதலெழுத்து** ஒன்றி வருவது **மோனை** ஆகும்.
**சான்று : சு**தந்திரம் - **சு**கம்தரும்; **ப**தம்தரும் - **பெ**ருமையும்

**எதுகை :** செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது **எதுகை** ஆகும்.
**சான்று :** சு**த**ந்திரம் - ப**த**ம்தரும் - இ**த**ம்தரும் - நி**த**ம்தரும்

**இயைபு :** செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இறுதி எழுத்தோ** அல்லது **இறுதிச் சீரோ** ஒன்றி வருவது **இயைபு** ஆகும்.
**சான்று :** காட்டி**லும்** - வாழ்த**லும்;** வேறுண்**டோ?** கீழன்**றோ?**

**சந்தம் :** செய்யுளுக்கு அழகு சேர்ப்பது **சந்தம்.** இப்பாடலை சந்த நயத்துடன் பாடி மகிழலாம்.

**அணி :** விடுதலை உணர்ச்சியைத் தூண்டும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளதால் **உயர்வு நவிற்சி அணிக்குப்** பொருத்தமாயிற்று.

**தலைப்பு : சுதந்திரத் தாகம்**

## இயல் 8

இரண்டாயிரமாண்டு நீளமுள்ள கவிதையை ஈன்ற
மூதாயியைத் தேடியலைந்த களைப்பில் பறவை
ஒருகாலத்தில் தன் தாகம் தணித்த
மண்பானையைத் தேடி அல்லலுற்றது.

பாடப்புத்தகத்தில் படம்பார்த்துச் சொன்ன
கதைக்குள்ளிருந்து நீருற்று எதுவும் பீறிடவில்லை
ஐவகை நிலங்களையும் அலகில் கொத்தி
அடைகாக்க இன்னொரு இடமற்றுப் போக...

நீலவண்ணக் கடற்பரப்பில்
அந்தப் பறவை ஒரு முட்டை இட்டது
அதன் குஞ்சு பொரிப்பில்
ஆயதமும் புல்லாங்குழல் மறுகையுமாய்
ஆணங்கொருத்தி உதித்தெழுந்தாள்.

வயல்வெளியெங்கும் சலசலத்துத் திரிந்த
மருதயாழின் ஓசை வழிந்தோட
கால்கள் சுழன்றாடிய விறலிக் கூத்தின்முன்
பிரபஞ்சமே தன்னைப் புனந்து கொண்டது.

பாணனின் கோப்பை
இப்போது காலியாயிருந்தது
தன் உடலிலிருந்து கிள்ளிப் பறித்த பூவைக்
குழந்தைக்குத் தந்து வலியில் மூழ்கிய

பச்சைத்தாவரத்தின் கண்களில்ஷ
பச்சைத்தாவரத்தின் கண்களில்ஷ
ஒருதுளி ரத்தம் தேங்கியிருந்தது.

சங்கக் கவிதையின் எழுத்தொன்றைத் திறந்து
காக்கைப்பாடினி வெளியே வந்தாள்.
ஆறாம்நிலத்தில் துளிர்த்த அறிவியல்தமிழி நீயென
அருகே வந்தவள் முத்தம் தருகையில்
பறவைகள் தொலைந்துபோன பூமியில்
குளிரூட்டப்பட்ட அறைக்குள் உட்கார்ந்து
கணிப்பொறித்திரையில்
என் சின்னமகள்
ஒரு காக்கையை வரைந்து கொண்டிருந்தாள

**- ஹெச். ஜி. ரசூல்**



**“கல்வி கரையில; கற்பவர் நாள் சில”**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com